பக்கங்கள் : பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 06 திங்கட்கிழமை (20.06.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :206

# தாயக மண்ணில் தங்கள் சுயத்தை தாமே நிர்ணயிக்க தமிழர் பிரகடனம்!

## புளொட் உறுப்பினர் சுட்டுக்கொலை!

வவுனியா,ஜூன்20

வவுனியா, கோவில்குளம் பகுதியில் நேற்று முன்னிரவு புளொட் உறுப்பினர் ஒருவர் இனந் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சடைக்கிளி என்று அழைக்கப்படும் வல்லி புரம் உதயகுமாரசிங்கம் (வயது42) என்ற நபரே கொல்லப்பட்டவர் என்று வவுனியாப் பொலீஸார் கூறினர்.

கோவில்குளம் - தெற்கு அறுப்பைக்குளம் வீதியில் அவரது வீட்டுக்கு அண்மையில் வீதி

(14ஆம் பக்கம் பார்க்க)

## மேல்மாகாண முதல்வர் பதவி துறந்தார்

கொழும்பு, ஜூன்20

மேல்மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் குரே தமது முதலமைச்சர் பதவியை நேற்று இராஜினாமா செய்தார்.

இன்றைய தினம் மேல்மாகாண சபையில் முதலமைச்சருக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சி யான ஐக்கிய தேசியக்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்க இருந்த நிலை யில் - அந்தப்பிரேரணைக்கு ஜே.வி.பி. முழு ஆதரவு வழங்கும் சூழலில் - முதலமைச்சர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கைலாசபதி மண்டபம் அதிர நேற்று சுயநிர்ணய கோஷம்!

யாழ்ப்பாணம்,ஜூன்20

**சிங்கள பௌத்த பேரினவாதத்தை முறியடித்து ஆக்கிரமிப்புப் படைகளிடமிருந்து, பாரம்பரிய வாழ்விடங்களை விடுவித்து, எங்கள் நிலத்தில் எங்கள் பலத்தில் எம் சுயத்தை நாமே நிர்ணயிப்போம்**

**- இவ்வாறு குடாநாட்டைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பிரதிநிதிகள் நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் கூடி பிரகடனம் வெளியிட்டனர். கைகளை உயர்த்தி உரத்த குரலில் உரிமைக்கோஷம் எழுப்பினர்.**

**சர்வதேச சமூகத்துக்கும், தெற்குத் தலைமைக்கும் தமிழர் நிலையை விளக்கிவிடுக்கும் செய்தியாக இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டது.**

தமிழ்த் தேசியத்தின் குரல் என்ற தொனிப் பொருளில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி

**படங்கள் உள்ளே**

கலையரங்கில் நேற்று முற்பகல் 10.45 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வு நண்பகல் 1.30 மணிக்கு முடிவடைந்தது.

மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பல்கலைக்கழக கல்விமான்கள், திணைக்கள அதிகாரிகள், இந்து, கிறிஸ்தவ,

(14ஆம் பக்கம் பார்க்க)

## பேரினவாதிகளைக் கண்டித்து வடமராட்சியில் இன்று பேரணி

கரவெட்டி,ஜூன்20

ஆழிப்பேரலை நிவாரணம், பொதுக்கட்டுமானத் துக்கான பொதுக்கட்டமைப்புப் போன்றவற்றை எதிர்க்கும் பேரினவாத சக்திகளின் செயல் களைக் கண்டித்து இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வடமராட்சியில் மாபெரும் கண்டப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மற்றும் பொது அமைப் புகள் என்பன இணைந்து இந்தப் பேரணியை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

இன்றையதினம் காலை 9 மணிக்கு திக்கம் சந்தியில் ஒன்றுகூடும் மக்கள் அங்கிருந்து ஊர் வலமாக சுப்பர்மடத்தைச் சென்றடைவர்.

அங்கு வைத்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கான மகஜரை கடற் புலிகளின் விசேட தளபதி கேணல் சூசை ஊடா கக் கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பேரணியின்போது கடற்கரை வீதியில் உள்ள காவலரண்களில் பணியாற்றும் படை யினரிடம் 'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்று வலியுறுத்தும் சிங்கள மொழியிலான பிரசுரங்கள் வழங்கப்படும் என்றும் -

ஐ.நா. செயலாளர் கோபி அனானுக்கான மகஜர் அனுப்பப்படவுள்ளதாகவும் - தெரிவிக்கப் பட்டது. (ஒ-70-173)

## ஆளுங்கட்சி எம்.பிக்களுக்கு இன்று ஜனாதிபதி மாளிகையில் கூட்டம்

### நேற்று திடீரென தகவல் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்20

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆளுங் கட்சியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தை இன்று அவசரமாகக் கூட்டுகின்றார். ஜனாதிபதி மாளிகையில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

உத்தேசப் பொதுக்கட்டமைப்பு யோசனையை நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பது தொடர்பி லான பலமுக்கிய விடயங்கள் குறித்து இந் தக் கூட்டத்தின்போது ஜனாதிபதி கலந்துரை

(14ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக திட்டவட்டமான முடிவு ஏதும் அரசிடமிருந்து வரவேயில்லை!

### தமிழ்ச்செல்வன் கூறுகின்றார்

கிளிநொச்சி,ஜூன்20

"ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற் றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற் கான பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடுவ தற்கு இலங்கை ஜனாதிபதி தரப்பு தயார் எனவும் இதோ கையெழுத்திடப் போகிறார், அதோ ஒப்பமிடப்போகிறார் எனவும் செய்தி கள் பல தரப்புகளில் இருந்தும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன, ஆனால் எங்களுக்கு (விடுதலைப் புலிகள்) அத்தகைய திட்டவட்ட மான தகவல் ஏதும் இலங்கை அரசுப் பக்கத் திலிருந்து கிடைக்கவேயில்லை"

- இப்படித் தெரிவிக்கிறார் தமிழீழ விடு தலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

நேற்றுமுன்தினம் பிற்பகலில் உதயனுக்கு இத்தகவலை தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக இணக்கம் ஏற்பட்டுவிட்டது எனவும் எந்நேரமும் அது கைச்சாத்தாகலாம் என்றும் தொடர்ந்து செய்தி

(14ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச்சுடர் வியாழனன்று**

**வழமையாக செவ்வாய்க்கிழமைகள் தோறும் உதயனுடன் வெளிவரும் கல் விச்சுடர் இவ்வாரம் மட்டும் வியாழக்கிழமை வெளியாகும் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.**

## ஜே.வி.பியின் தேசிய மாநாடு 29ஆம் திகதி கொழும்பில்!

கொழும்பு, ஜூன்20

நாடாளுமன்றிலும், மாகாண சபைகளிலும் ஆளுந்தரப்பிலிருந்து வெளியேறிய ஜே.வி.பி. தனது இந்தச்செயற்பாடுகள் குறித்து விளக்க மளிப்பதற்காக தனது தேசிய மாநாட்டை எதிர் வரும் 29ஆம் திகதி கொழும்பில் கூட்டவுள்ளது.

கொழும்பு நகரசபைத் திடலில் நடைபெற வுள்ள இந்த மாநாட்டிற்காக ஆயிரக்கணக்கான தனது உறுப்பினர்களை கொழும்பிற்குக் கொண்டுவரவும் ஜே.வி.பி நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

அதேசமயம் - அதற்கிடையில் - இரண்டு வாரகால விழிப்புணர்வு செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்தி வீடு வீடாகச்சென்று தமது கட்சியின் நிலைப்பாடு குறித்துவிளக்கமளிப்ப தற்கும் ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.

இவற்றைத்தவிர எதிர்வரும் முதலாம் திகதி யிலிருந்து அரசிற்கெதிரான பொதுக்கூட்டங் களை நாடளாவிய ரீதியில் நடத்துவதற்கும் ஜே.வி.பி. முடிவுசெய்துள்ளது.

## பேரினவாதத்தால் பாதிக்கப்படும் தமிழ்–முஸ்லிம் மக்களின் கௌரவ வாழ்வை உறுதிப்படுத்துவதே புலிகளின் நோக்கம்!

### இஸ்லாமியருடனான சந்திப்பில் இளம்பரிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்20

சிங்கள பௌத்த பேரினவாத மேலாதிக்கத் தால் பாதிக்கப்படும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு கௌரவமான பாதுகாப்பான - சுதந் திரமான வாழ்வை உறுதிப்படுத்துவதே விடு தலைப் புலிகளின் நோக்கம்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலி களின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் சி.இளம்பரிதி.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினருக்கும் முஸ்லிம் மக் களுக்குமிடையிலான சந்திப்பு நேற்றுப்பிற்பகல் நாவாந்துறை ஒஸ்மானியாக் கல்லூரியில் நடை பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற் றியபோதே இளம்பரிதி மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

இந்தச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செழியன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளு

(14ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்புக்கான முழு ஆதரவை ஐ.தே.கட்சி பகிரங்கப்படுத்த வேண்டும்!

### ரணிலுடனான சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்து

கொழும்பு,ஜூன்20

பொதுக்கட்டமைப்புக்கான தனது முழுமை யான ஆதரவை பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. பகிரங்கமாகத் தெரிவிக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத் தியுள்ளது.

நேற்று மாலை எதிர்க்கட்சித் தலைவர் ரணில விக்கிரமசிங்கவை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் குழு இந்தக் கோரிக்கையை வலி யுறுத்தியுள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழ்த் தேசியத்தின் குரலாக ஒலித்தவை....

## எங்களை அடக்க நினைக்காதீர்கள்

- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் -



20வருடங்களாக எங்களை அடக்கி ஒடுக்கி ஆளுகின்ற இனத்திற்கு சொல்லுகின்ற ஒரு செய்தியாகவே இன்றைய செய்தி அமைந்திருக்கின்றது.

பௌத்த பேரினவாதம் இவ்வளவு காலமும் எங்களை அடக்கி வாழ்ந்து, மீண்டும் மீண்டும் எம்மை அடக்க வேண்டும் என்பதை மனதிலே கொண்டு, இன்று பௌத்த குருமார்கள் தங்களால என்ன செய்யமுடியும்? செய்யமுடியாது என்பதை நிர்ணயப்படுத்துகின்ற வகையிலே உண்ணாவிரதம் என்கிற போரினாலே எங்களை அடக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்தப் பௌத்த குருமார்களுக்கு குருமார்களாக இருக்கின்ற நாங்கள் மீண்டும் கேட்டுக்கொள்வது "எங்களை மீண்டும்மீண்டும் அடக்கவேண்டாம் எங்களுடைய சுதந்திரத்திற்காக நீங்களும் குரல் கொடுக்கவேண்டும்" என்றே.

இன்று தேசியக் கட்டமைப்பை உருவாக்க வேண்டியது இந்த நேரத்தில் பௌத்த குருமார்கள் எவ்வளவு தூரம் அதைப் பல வீனப்படுத்தலாம் என்பதை (13ஆம் பக்கம் பார்க்க)

## நாம் மொழியால் ஒன்றுபட்டவர்கள்!

- மௌலவி சகில் மௌலானா -



இன்று ஒற்றுமை எங்கோ ஒளிந்து கொண்டுள்ளது. இது எங்களை நோக்கி வந்தாலும் எங்களுக்கிடையே பரவ விடாது ஒற்றுமை என்ற வேரை அறுக்கப் பார்க்கும் சதிகாரர்கள் வளர்ந்து கொண்டே போகிறார்கள்.

வெளிமாவட்டங்களைச் சேர்ந்த எமது முஸ்லிம் சகோதரர்கள் பலர் யாழ்.மருத்துவபீடத்திற்கு தெரிவுசெய்யப்பட்டு கல்வியைத் தொடர வந்தனர். ஆனால், யாழ். மாவட்டத்திற்கு வெளியே வசிக்கும் அரசியல்வாதிகள் சிலர் முஸ்லிம் மாணவர்களிற்கு இங்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது. அவர்கள் இங்கு கற்க முடியாது என பலவாறு கூறினார்கள். இத்தகைய செயற்பாடு யாழ். மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்துவரும் முஸ்லிம் மக்களுக்கு பெருந்தடையாக உள்ளது.

நான் அனைவருக்கும் சொல்லவிரும்புவது என்னவென்றால் இங்கு குடியேறி இருக்கும் முஸ்லிம்களான எங்களுக்கு எவ்விதமான துன்பங்களும் அச்சுறுத்தல்களும் இல்லை. நாங்கள் சுதந்திரமாக வாழ்கின்றோம். எங்களுக்கு எவ்விதமான (13ஆம் பக்கம் பார்க்க)

## எமது கௌரவத்தை காயப்படுத்தாதீர்கள்!

- அருட்தந்தை பெர்னாட் அடிகளார் -



யாழ். மக்களிடையே அண்மையில் நடத்தப்பட்ட ஆய்விலிருந்து பெறப்பட்ட கருத்து இலங்கைத்தீவின் தென்பகுதி சமூகத்துக்கும், சர்வதேச சமூகத்திற்கும் தெரிவிப்பதே இந்த நிகழ்வின் நோக்கமாகும்.

தமிழர்களாகிய நாம் சிங்கள மக்களையோ, பௌத்த மதத்தையோ அவமதிக்கவில்லை. மாறாக அம்மக்களையும், மதத்தையும் மதிக்கின்றோம். எமது தேசியத்தைப் பற்றி நாம் குறிப்பிடும் போது, பிற இனங்களின் தேசிய உணர்வையும் மதித்துத்தான் குறிப்பிடுகின்றோம். ஆனால், எவருடைய தேசிய உணர்வும் எமது கௌரவத்தைக் காயப்படுத்த வேண்டாம் என்பதே எமது குரல். எம்மைச் சிதைத்து வரும் போர் உருவாவதற்குப் போின வாதமே காரணம், இப்பேரினவாதத்தை முறியடிப்பதற்கு தென்னிலங்கையில் பலம்வாய்ந்த அரசியற் சமூகமோ அரசியற் கலாசாரமோ, தலைமைத்துவமோ இலங்கை விடுதலைபெற்ற காலத்திலிருந்து இதுவரை காணப்படவில்லை. இனிமேல் எமது எதிர்காலத்தை நாமே நிர்ணயிப்போம் (மற்றொரு செய்தி4ஆம் பக்கத்தில்)

## இன்று முளைத்த கோரிக்கை அல்ல இது;

# தமக்கெனத் தனியரசு அமைத்து தம்மைத்தாமே ஆண்டவர் தமிழர்!

## அந்த நிலைக்குத் திரும்பத் தீர்மானித்துள்ளோம்

யாழ்ப்பாணம்,ஜூன்20

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற தமிழ்த்தேசியத்தின் குரல் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.மோனதாஸ் கூறியதாவது:-

தமிழர் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கான கோரிக்கை இன்று புதிதாக முளைத்த தொன்று அல்ல. ஏற்கனவே, சுயநிர்ணய உரிமையுடன் வாழ்ந்த நாம் அதில் பலவீனப்பட்ட நிலையில் இருந்து விடுபட்டு மீண்டும் அதே பலமான நிலையில் நின்றுகொண்டு அதனைப் பெறுவதற்குத் தீர்மானித்து இருக்கின்றோம்.

தமிழ்நாட்டுத் தமிழர்கள் எழுத்து, மொழி, கலை, மதம், பண்பாடு என்பவற்றால் தம்மை எப்போது தனித்து அடையாளப்படுத்தத் தொடங்கினார்களோ அன்றைய காலத்திலிருந்து இலங்கைத் தமிழர்களாகிய நாம் எம்மை ஒரு தனி இனமாக அடையாளங்கண்டு கொண்டோம்.

தமிழர்கள் இலங்கையை அரசாண்டனர். தமக்கென யாழ்ப்பாணத்தில் இராசதானிகளை அமைத்து வாழ்ந்தனர். தமிழ்நாடு மற்றும் தென்னிலங்கை அரசுகளிற்கு சவாலாகவும், நட்புறவாகவும் இருந்து ஈழத்தமிழ் அரசுகள் ஆட்சி புரிந்ததை வரலாறு கூறுகின்றது.

தமிழ்நாட்டில் வாழும் 6கோடி தமிழர்களுக்கு தமிழ்த்தேசிய உரிமை உணர்வை முதலில் ஏற்படுத்தி தமிழர் சுயநிர்ணய உரிமையுடன் வாழவேண்டும் என்பதை எடுத்துக்காட்டிய பெருமை எமது நாவலர் பெருமானைச் சாரும்.

தென்னிலங்கை அரசுகள் எமது தனித்துவத்தையும் சுயநிர்ணய உரிமையையும் மதிப்பதற்கு அஞ்சியிருந்தாலும், எம்மை ஆண்ட ஐரோப்பியர் தமது ஆட்சியின்போது எமது தனித்துவத்தை மதிப்பதற்குத் தவறவில்லை. எமது இந்த மண்ணை ஐரோப்பியர் ஆட்சி செய்யும்போது தமிழரை இணைத்துக்கொண்டு ஆட்சிசெய்தனர்.

இன்று நடைமுறையிலிருக்கும் தேசவழமைச சட்டம், பாரம்பரியமாக எம்மிடம் இருந்த பழக்க வழக்கம், பண்பாடு, வாழ்க்கைமுறை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டுஉருவாகியது. அது எமது தேசியத்தின் அடையாளச் சின்னம். அதை ஒல்லாந்தர்கள் சட்டமாகத் தமது சட்டப்புத்தகத்திலே இணைத்துக் கொண்டதன் மூலம் எமது தேசிய அடையாளத்தை அங்கீகரித்துள்ளார்கள்.

இன்று நாம் சர்வதேச உலகின்முன் தனித்துவமான, தேசிய இனமாக அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றோம். இந்நிலையில் நாம் சுயநிர்ணய உரிமையுடன் வாழவிரும்புவதை எவரும் மறுக்கமுடியாது.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து யுத்தம்இன்றி, இரத்தம் சிந்தாது நாம் நமது தனித்துவத்தை இழக்காது சகலருடனும் வாழ விரும்பினோம். அதையே இன்று நாம் விரும்பிநிற்கின்றோம்.

ஆனால், எமது உரிமை மற்றும் தேசியத தனித்துவம் ஆகியவை பெரும்பான்மை மக்களால் மறுக்கப்படுகின்றது. இந்நிலையில் நாம் எமது சுயநிர்ணய உரிமையை நாமாக தீர்மானிக்கும் நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளோம்.



அதன் விளைவாகத்தான் தமிழ்த்தேசியத்தின் குரலாக இன்றுநாம் பேரிகைகள் முழங்க, குரல்கள் ஒலிக்க கைகள தாளம்போட குரல் எழுப்பிக்கொண்டிருக்கிறோம்.

உலகின் எந்தவொரு பல்கலைக்கழகத்திற்கும் இல்லாத சிறப்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு உண்டு. அதுதான் தமிழ்த் தேசியப் போராட்டத்தின் வளர்ச்சியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியும் இணைந்தே உள்ளன - என்று சொல்லிக் கொள்கிறேன். (ஒ-202-7)

# தமிழர்களுக்கு எதிரான வன்முறை; உடனடி நடவடிக்கை வேண்டும்!

## அரசிடம் மக்கள் பேரவை வலியுறுத்து

திருகோணமலை, ஜூன்20

சேருநுவர பிரதேசத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு காரணமானவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளது.

மூதூர், சேருநுவரவில் பொலீஸ் புலனாய்வுப்பிரிவு அதிகாரி ஒருவர் கடந்த வெள்ளிக் கிழமை இரவு சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தையடுத்து அப்பகுதியில் தமிழர்களுக்கு எதிராக வன்முறைகள் இடம்பெற்றன.

இதுதொடர்பாக தமிழ் மக்கள் பேரவை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மூதூர் சேருநுவரப் பிரதேசத்தில் தமிழ்மக்கள் மீது வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. தமிழ் மக்களுக்கு சொந்தமான வாகனங்கள் எரிக்கப்பட்டுள்ளன. இச்செயலின் பின்னணியில் ஸ்ரீலங்கா காவற்படையினர் இருந்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த காலத்தில் நடைபெற்றதைப்போன்று ஒரு சம்பவம் நடைபெற்றால் அதற்குப் பழிவாங்குவதற்காகத் அப்பாவித்தமிழ்மக்கள் மீதுதாக்குதல் நடத்தியும் வாகனங்களை எரித்தும் கொலைப்பயமுறுத்தல் விடுத்தும் உள்ளனர் இவ்வாறான செயல்கள் மீண்டும் அரங்கேற்றப்பட்டுள்ளமையானது சமாதானத்தை அறவே இல்லாதொழிக்கும் செயலாகும்.

மூதூர் பிரதேச தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள காடைத்தனம் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இதற்குப் பின்னணியில் உள்ள பாதுகாப்பு படையினரை இனங்கண்டு அவர்களுக்கெதிராக உடனடி நடவடிக்கை எடுத்து இவ்வாறான செயல்கள் இனிமேல் தொடர அனுமதிக்கக் கூடாதென ஸ்ரீலங்கா அரசையும் பாதுகாப்பு அதிகாரிகளையும் கேட்டுக்கொள்கிறோம். இது தமிழ்மக்களை அச்சுறுத்துகிற ஒரு செயலாக இருக்குமென நினைத்தால் இதன் விளைவு எதிர்காலத்தில் சமாதானத்தை பூரணமாக இல்லாதொழித்து நாட்டை மீண்டுமொரு யுத்தத்திற்கு கொண்டு செல்லுமெனவும் எச்சரிக்கின்றோம் என்றுள்ளது. (ஒ)

## மானிப்பாயில் பெண் சிசு மீட்பு

யாழ்ப்பாணம்,ஜூன்20

மானிப்பாய் இடிகுண்டடி வீதிக்கு அருகில் பெண் சிசு ஒன்று மானிப்பாய்ப் பொலீஸாரினால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பொலீஸாருக்கு வழங்கிய தகவல்களின் அடிப்படையில் பொலீஸார் இச்சிசுவை மீட்டனர் எனக் கூறப்படுகின்றது. (ஒ-78-ரி)

## நயினையில் நாளை இரதோற்சவம்

யாழ்ப்பாணம்,ஜூன்20

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த இரதோற்சவம் நாளை செவ்வாய்க் கிழமை காலை இடம்பெறவுள்ளது.

நாளைமறுதினம் புதன்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் இரவு திருவூஞ்சல், கொடியிறக்கம் ஆகியவையும், எதிர்வரும் வியாழக்கிழமை தெப்பத்திருவிழாவும் இடம் பெறவுள்ளன.

இந்த உற்சவதினங்களை முன்னிட்டு பஸ் மற்றும் படகுச்சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## பேராளர் மாநாடு இன்று

யாழ்ப்பாணம்,ஜூன்20

யாழ். மாவட்டத் தேசிய எழச்சிப் பேரவையின் யாழ். மாவட்டப் பேராளர் மாநாடு இன்று நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்டச் செயலாளர் சொலமன் சூ.சிறில் தலைமையில் முற்பகல் 10 மணிக்கு மாநாடு ஆரம்பமாகவுள்ளது. இதில், தேசிய எழுச்சிப் பேரவையின் ஊரகம், பிரதேசம், கோட்டம், மாவட்டம் ஆகிய மட்டங்களிலிருந்து எழுச்சிப்பேரவை உறுப்பினர்கள், விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் ஆகியோர் உட்படப் பலரும் கலந்துகொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. சமகால அரசியல்நிகழ்வு, அது தொடர்பாக முன்னெடுக்கப்படவேண்டிய செயற்றிட்டங்கள் ஆகியவை உட்படப் பல விடயங்கள் பேராளர் மாநாட்டில் ஆராய்ந்து தீர்மானிக்கப்படவுள்ளன என்றும் கூறப்பட்டது. (ஒ)

## வேலணைக் கடலில் சடலம் மீட்பு!


யாழ்ப்பாணம், ஜூன்20.

வேலணைக் கடலில் மிதந்து வந்த சடலம் ஒன்று நேற்று நண்பகல் ஊர்காவற்றுறையில் பொலீஸாரால் மீட்கப்பட்டது. இருவாரங்களுக்கு முன்னர் உயிரிழந்தவருடையதாக இருக்கலாம என்று கருதப்படும் அந்தச் சடலத்தில் நீல நிறச்சாரம் உள்ளது.

ஊர்காவற்றுறை பதில் மாவட்ட நீதிபதி பொன்.பூலோகசிங்கம் ஸ்தலத்துக்கு நேரில் சென்று விசாரணை நடத்தினார். சடலத்தை பிரேத பரிசோதனைக்குட்படுத்தும்படியும் ஒரு வாரகாலத்துக்குள் எவரும் உரிமைகோராவிட்டால் சடலத்தைப் புதைக்கும்படியும் நீதிபதி உத்தரவிட்டார்.

சடலம் தற்போது யாழ்.போதனா வைத்திய சாலையின் பிரேதசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு பொதுமக்களைப் பொலீஸார் கேட்டுள்ளனர். (ஒ)







விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியுடன் முஸ்லிம்கள் நேற்றுக் கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. க.சிவனேசன் எம்.பி., மௌலவிகள் சுபியான், அலாவுதீன் ஆகியோரும் காணப்படுகின்றனர். (படங்கள்: பிரபா)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# பயனற்ற பயணங்கள்!

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் அடுத்த ஓரிரு தினங்களில் உடன்பாடு ஒன்றில் ஒப்பமிடத் தயார் என அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்புக்குக் கடந்தவாரம் கோடி காட்டிய ஜனாதிபதி இப்போது அந்த முடிவிலும் தளம்பல் நிலைக்கு வந்து விட்டார் எனத் தெரியவருகின்றது.

அந்தப் பொதுக்கட்டமைப்பு உடன்பாடு தொடர்பாக மகாநாயக்கர்களுக்கு அறிவித்து விளக்கமளிப்பது, மகாநாயக்கர்கள் மற்றும் பலதரப்பினரதும் வற்புறுத்தல்கள், விருப்பங்கள் போன்றவற்றுக்கு இடங்கொடுக்கும் வகையில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முன்னர், அதை நாடாளுமன்றுக்குச் சமர்ப்பிப்பது என்பன போன்ற பல புதிய விடயங்களை முன்நிறுத்தித் தன்னையும் குழப்பி, இந்த விடயத்தில் நோர்வே அனுசரணைத் தரப்பையும் குழப்பி, மக்களையும் குழப்பிக் கொண்டிருக்கின்றார் ஜனாதிபதி என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இனி, இன்று கொழும்பு வரும் நோர்வே வெளிவிவகாரப் பிரதி அமைச்சர் விடர் ஹெல்கிஸன், ஜனாதிபதிக்கும் அவரது தரப்பினருக்கும் கொடுக்கும் அழுத்தத்தினால்தான் விடயம் முன்நகரும் என்ற நிலைமை.

சம்பந்தப்பட்ட தரப்புகள் மூலம் கடந்த சில நாள்களாக கொடுக்கப்பட்ட அழுத்தங்கள் - போடப்பட்ட (குத்து) ஊசிகள் - காரணமாக, பொதுக்கட்டமைப்பு உடன்பாடடில் கையொப்பமிட முன்னர் அதனை ஒரு பிரேரணையாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் தமது உத்தேசத் திட்டத்தை - இடையில் வந்த தமது யோசனையை - ஜனாதிபதி குமாரதுங்க இப்போதைக்குக் கைவிட்டு விட்டார். முதலில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னரே அதை நாடாளுமன்றுக்குச் சமர்ப்பிப்பது என்ற முடிவுக்கு ஜனாதிபதி வந்துவிட்டார் என்றும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன. அப்படி ஒரு நிலைமைக்கு ஜனாதிபதி வந்து விட்டார் என்றால் அதுவும் ஆக்கபூர்வமானதுதான்; ஆரோக்கியமானதுதான்.

எது, எப்படியென்றாலும் இன்று கொழும்பு வரும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் நாளைமறுதினம் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் ஏனைய புலிகள் பிரமுகர்களையும் சந்திப்பதற்காகக் கிளிநொச்சி செல்கிறார்.

பொதுக்கட்டமைப்பில் அரசுத்தரப்பு கையெழுத்திடாத நிலையில் -

அல்லது கையெழுத்திடுவதற்கான இறுதி ஏற்பாடுகள் எல்லாவற்றையும் பூர்த்திசெய்துவிட்டு, இறுதிக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இல்லாமல் -

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் கிளிநொசசி சென்று புலிகளைச் சந்திப்பதில் அர்த்தம் ஏதுமேயில்லை.

உடன்பாடு இதோ செய்கிறோம், அதோ செய்கிறோம் என்றெல்லாம் சர்வதே சமூகத்துக்கும் நோர்வே அனுசரணைத் தரப்புக்கும் நன்கு கயிறு கொடுத்துவிட்டு இன்னும் இழுத்தடிக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

உண்மையில் இன்று திங்கட்கிழமைக்கு முன்னர் - பொதுக்கட்டமைப்பு உடன்பாடு கைச்சாத்தாகிவிடும் என்றும் -

அதை ஒட்டி அரசு - புலிகள் இடையே எழும் நல்லெண்ண - புரிந்துணர்வு - நிலைப்பாட்டைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, இதுவரை தடைப்பட்டிருந்த அமைதி முயற்சிகளை - சமாதான எத்தனங்களை - ஆக்கபூர்வமான திசையல் முன் நகர்த்தும் பணிகளை மீண்டும் சுறுசுறுப்பாக ஆரம்பிக்கலாம் என்றும் -

பலத்த எதிர்பார்ப்புகளை மனதில் வைததுக்கொண்டுதான் இப்போது - ஜூன் இறுதியில் - இலங்கை வரத்திட்டமிட்டிருந்தார் நோர்வே பிரதியமைச்சர் விடார் ஹெல்கிஸன.

ஆனால், அவர் எதிர்பார்த்தது எதுவும் இங்கு ஒப்பேறவில்லை; நடக்கவில்லை. அவர் இங்கு வந்தும் இன்னும் 'சுத்திச் சுத்தி சுப்பரின் கொல்லைக்குள்' என்ற மாதிரிப் பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டுக்கு அரசை இணங்க வைக்கும் பணியில்தான் - முயற்சியில்தான் - தொடர்ந்தும் ஈடுபடவேண்டும் என்ற நிலைமை. அதில் கூடக் குறிப்பிடத்தக்க அளவுக்கு நோர்வேத் தரப்பின் முயற்சிகள் முன் நகர்ந்தவையாக இல்லை.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் திட்டவட்டமான - உறுதிப்பாடான - ஸ்திரமான - ஒரு முடிவுக்கு ஜனாதிபத வந்து, அது தொடர்பான ஏற்பாடுகள் மற்றும் செயற்பாடுகளுக்கு உரிய நேர அட்டவணை ஒன்றை ஜனாதிபதி குமாரதுங்க முன்வைக்காத நிலையில் - அந்த நேர அட்டவனைப்படி தவறாது செயற்பட ஜனாதிபதி இணங்காத வரையில் - இப்படி இலங்கைக்கு அடிக்கடி வந்து, கிளிநொசசிக்கும் கொழும்புக்கும் இடையில் நோர்வே அனுசரணைத் தரப்பில் ஓடித்திரிவதில் அர்த்தம் ஏதுமில்லை; பயன் ஏதும இல்லை.

இலங்கைக்கு வரும் நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர், இலங்கைத் தரப்பில் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகத் திட்டவட்டமான ஒரு முடிவை - தீர்க்கதாசனப் போக்கை - இலங்கை வெளிப்படுத்தும் வரை கிளிநொச்சி செல்வது குறித்துச் சிந்திக்காமல் இருப்பது நல்லது.

# நாட்டில் தகவல் தொழில்நுட்ப அறிவை 50 வீதத்தால் அதிகரிப்பதற்குத் திட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்20

அடுத்த மூன்று ஆண்டுகாலத்துக்குள் இலங்கையில் தகவல் தொழில்நுட்ப அறிவினை ஐம்பது வீதத்தினால் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

இலங்கையில் தற்போது 9.8 வீதமாக உள்ள தகவல் தொழில்நுட்ப அறிவினை மேலும் விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டுவருகின்றது.

சுயமாக இயங்கும் கிராமிய அமைபுகளுக்கு இலங்கைத் தவகல் தொழிலநுட்ப நிறுவனத்தின் மூலம் நிதி வழங்கித் தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தித் திட்டங்களை அமுல் செயவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப அறிவை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள அமைப்புக்களுக்கு வழங்குவதற்கான 20 கோடி ரூபாவினை இலங்கைத் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் ஒதுக்கீடு செய்துள்ளது.

தகவல் தொழில் நுட்பத்தை வளர்க்கும் ஒவ்வொரு தனிநபர்களும் ஐந்து லட்சம் ரூபா நிதியினை இதன் பொருட்டு பெற்றுக்கொள்ளமுடியும்.

முப்பது பிரிவுகளில் வகைப்படுத்தப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தித் திட்டங்களுக்காக 20 கோடி ரூபாவை வழங்க உள்ளதாக இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை -

இன்றைய உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கத்தக்க வகையில் ஆசிரிய - மாணவர்கள் தகவல் தொழில் நுட்பத்தை அறிந்திருப்பது அவசியம் எனவும் தகவல் தொழில் நுட்ப அறிவை வளர்க்கவும் ஊக்கப்படுத்தவும் ஆசிரிய - மாணவர்களிடையே போட்டி நிகழ்ச்சிகளை நடத்த உள்ளதாகவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றுடன் இணைந்து கல்வி அமைச்சு பின்தங்கிய மற்றும் கிராமப்புறப் பாடசாலைகளுக்கு நவன தகவல் தொழில்நுட்பங்களைப பெற்றுக்கொடுக்கவும், கணனிகளை வழங்கவும் நடவடிக்கை எடுத்துவருகின்றது.

கணனிகளை இயக்குவதற்குத் தேவையான மின்சார வசதிகளற்ற பாடசாலைகளுக்குச் சூரிய சக்தி மூலம் மின்சாரவசதியைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தற்போது 300 இற்கும் மேற்பட்ட தனியார் பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்ப அறிவை வளர்க்கக் கூடிய வசதிகளும் வாய்ப்புகளும் உள்ளன. இவற்றில் பயிலும் 75 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்ப அறிவு சிறந்த முறையில் வழங்கப்படவேண்டும்.

இதன்பொருட்டு இங்கு கற்பிக்கும ஆசிரியர்களுக்கு 'மைக்ரோ சொப்ட்' நிறுவனம் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளை வழங்கி அறிவினை வளர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டுவருகின்றது. (ஐ-152)

# மினிபஸ்ஸில் திருடப்பட்ட நகைகள் ஒரு வாரம் கழித்து மீட்கப்பட்டன

கைதடி,ஜூன்20

அண்மையில் மினிபஸ் ஒன்றில் திருடப்பட்ட 2 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் ஒருவாரம் கழித்து மீட்கப்பட்டுள்ளன.

ஆவரங்காலைச் சேர்ந்த திருமதி ஜீவநேசன் சகிலா என்பவர் தனது உறவினர் வீட்டுத் திருமணத்திற்குச் செல்வதற்காக 2 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளை கைப்பையில் எடுத்துச்சென்றுள்ளார்.

ஆவரங்காலில் இருந்து நீர்வேலி நோக்கி மினிபஸ்ஸில் சென்ற அப் பெண், நீர்வேலியில் பஸ் தரிப்பிடம் ஒன்றில் இறங்கிய பின்னரே தனது கைப்பை வெட்டப்பட்டு நகைகள் களவாடப்பட்டுள்ளதை அறிந்துள்ளார்.

உடனேயே யாழ். நகர் சென்று, தான் வந்த மினிபஸ் சார்தியிடம் அவர் இது தொடாபாக விசாரித்துள்ளார். தன் பின்னால் நின்று பயணித்த சோதிடம் கூறும் இரு பெண்கள் மீதே தனக்குச் சந்தேகம் என்றும் கூறியுள்ளார்.

அப்பெண்களைத் தேடிச்சென்ற போதும் அவர்களை அவரால் கண்டு பிடிக்கமுடியவில்லை. இதேவேளை, அவர்களைக் கல்வியங்காட்டில் இருந்து நாவற்குழி வரை ஏற்றிச்சென்ற ஓட்டோ சாரதிதான், அவர்களைக் காணும்போது உடன் அறியத்தருவதாகத் தெரிவித்துள்ளார்.

இக்களவு தொடர்பாகக் கோப்பாய பொலீஸாருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினரிடமும் அப் பெண் முறைப்பாடுசெய்தார்.

இந்நிலையில், ஒரு வாரம் கழிதது அந்தச் சோதிடம் கூறும் பெண்களைச சந்தித்த மேற்படி சாரதி அவர்களைத் தந்திரமாக நகைகளைப் பறிகொடுத்த பெண்ணின் உறவினர் வீட்டிற்கு அழைத்துச்சென்றுள்ளார்.

அவர்களைத் தீரவிசாரித்த போது அவர்கள் தாம் நகைகளை மினிபஸ்ஸில் கண்டெடுத்ததாகக் கூறி நுணாவில் அம்மன் கோயிலுக்கு அருகேயுள்ள முருகன் கோயிலடிக்கு அழைத்துச்சென்று அங்கிருந்த தமது உறவினர்களிடமிருந்து நகைகளைப் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

திருட்டுப் பேர் வழிகளைத் தந்திரமாகப் பிடிக்க உதவிய ஓட்டோச் சாரதியின் துணிச்சலையும் நேர்மையையும் பாராட்டி அவருக்கு வெகுமதி வழங்கப்பட்டது. (ஐ-75-202)

# பட்டதாரிகள் நேர்முகப் பரீட்சை: கடிதம் விநியோகிக்க விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்20

வடக்கு-கிழக்கு மாகாணப் பொதுச சேவை ஆணைக்குழுவினால் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான நேர்முகப்பரீட்சைக் கடிதங்களை விநியோகிக்க யாழ். பிரதம தபாலகம் விசேட ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இதன்படி, யாழ். பிரதம தபாலகப் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான கடிதங்கள் இன்று திங்கட்கிழமை காலை அவரவர் முகவரிகளில் சேர்ப்பிக்கப்படும்.

குடாநாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இன்று பிற்பகல் 2 மணிக்கு முன்னர் யாழ். பிரதம தபாலகத்தில் தமக்குரிய் நேர்முகப் பரிட்சைக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளலாம் - குறிப்பிட்ட நேரத்துக்குள் பெற்றுக் கொள்ளாதவர்களின் கடிதங்கள் தபாலில் சேர்க்கப்படும் என்றும் -

பின்னர் அவரவர் இடங்களில் உள்ள தபாலகங்கள் மூலம் இந்தக் கடிதங்கள் விநியோகிக்கப்படும் என்றும் - கூறப்பட்டது. (எ)

# பாடசாலைகளில் தொழில் வழிகாட்டி மையங்களை நிறுவுவதற்கு முடிவு

வலி.தெற்கு,ஜூன்20

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் மாணவர் தொழில் வழிகாட்டி மையங்கள் அமைக்கப்படவுளளன. வலிகாமம் கல்வி வலய மாணவர் அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிபபாளர் கு.சண்முகநாதன் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறார்.

ஆரம்ப முயற்சியாக சுயமாக விரும்பி ஆரம்பிக்கும் அதிபர்களைக் கொண்ட பாடசாலைகளில் இந்த மையங்களை அமைக்கவும், தொடர்ந்து சகல பாடசாலைகளிலும் அவற்றை ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வழிகாட்டல் மையங்களிலும் தொழில் வாய்ப்புகளுக்கான விவரங்கள், தகவல்கள், தொழிலநுட்பக் கல்லூரி கற்கைநெறிகள் பற்றிய விவரங்கள், வர்த்தமானி ஏடுகள் என்பவற்றை பெற்றுவைத்திருக்க ஏற்பாடுகள்செய்யப்படும்.

மாணவர்கள தாம் கல்விகற்கும் காலங்களிலேயே எதிர்காலத்தில் தாம் மேற்கொள்ளத் தேவையான தொழில்களைப் பற்றித் தெரிந்துகொள்ளவும், முடிவுசெய்யவும் பொருத்துமான தொழில்களை இனங்கண்டுகொள்ளவும் இத்தொழில் வழிகாட்டி மையங்கள வசதிசெய்து கொடுக்கும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் கல்வி வலயத்திலேயே முதன் முதலாக இவை ஆரம்பிக்கப்பட உளளன. (ஐ-152)

**உதயவாக்கு**

பிறர் தவறைத் திருத்துவதற்கு முன்னர்
உன்னை நீயே அறிந்துகொள்.

**நாளை**

*ஆனி 07*
*செவ்வாய்க்கிழமை*
*21.06.2005*
*திதி : சதுர்த்தசி*
*பிற்பகல் 12.22 வரை*
*நட்சத்திரம் : கேட்டை*
*முன்னிரவு 10.45 வரை*
*பூரணை விரதம்*
*சுபநேரம் :10.24 - 11.54*
*ராகுகாலம்: 02.54 - 04.24*
*(யாவும் பழைய நேரப்படி)*

# தமிழ் இளைஞனின் எரிந்த சடலம் சுவிஸ்–ஜேர்மன் எல்லையில் மீட்பு!

வடமராட்சி,ஜூன்20

நீண்ட காலமாக சுவிஸில் வசித்து வந்த வடமராட்சி கிழக்கு அம்பன் என்ற இடத்தைச் சேர்ந்த தங்கராசா ஸ்ரீஸ்கந்தராசா (வயது-29) என்ற இளைஞன் சுவிஸ் - ஜேர்மனி எல்லைப் புறத்தில் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சுவிஸ் - ஜேர்மனி எல்லைப் புறத்தில் இருந்து 25 கிலோ மீற்றர் தூரததில் உள்ள காட்டுப் பகுதி ஒன்றில் கார் ஒன்றில் இவரது சடலம் தலைக்கு கீழ்ப்பட்ட பகுதி எரிந்த நிலையில் ஜேர்மன் பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளது என்று இங்கு தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவரது சடலம் ஜேர்மனியிலிருந்து இன்று சுவிஸ் நாட்டுக்கு எடுத்து வரப்பட்டு அங்கு எதிர்வரும் சனிக்கிழமை தகனஞ்செய்யப்படும் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

அடுத்த மாதம் தன்னுடையதும், சகோதரியினதும் திருமணங்களுக்காக இவர் தாயகம் திரும்ப இருந்தார்.

இவரது மரணம் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

# முட்கம்பிச் சுருள்கள் அன்பளிப்பு

பட்டினிக்கு எதிரான இயக்க நிறுவனத்தினர் 85 முள்கம்பி சுருள்களை கைதடி கமநல சேவைகள் நிலையத்திற்கு வழங்கியுள்ளனர்.

தென்மராட்சி தெற்குப் பகுதியில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படும் போது, கட்டாக்காலி மாடுகளால் பயிர்கள் அழிக்கப்படாமல் வேலிகள் அமைப்பதற்கு இந்தக் கம்பிச் சுருள்கள் பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் அப்பகுதி நெற்செய்கையாளர்களும் கமநல திணைக்களமும் இணைந்து ஐந்தரை மைல் நீளத்திற்கு கம்பி வேலிகள் அமைத்து கட்டாக்காலி மாடுகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாத்தமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

# தமிழர் உரிமைப் பிரச்சினைக்கு நியாயமான வழிகளை கையாள பேரினவாதம் ஒருபோதும் இடம்தராது!

நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற தமிழ்த் தேசியத்தின் குரல்நிகழ்வில் வண.பிதா ஐ.பேர்ணாட் அடிகள் ஆற்றிய உரை முழுமையாக இங்கு பிரசுரமாகின்றது.

இந்நிகழ்வின் தலைவர் அவர்களே, மக்களின் மதிப்பை பெற்றிருக்கும் பெரியோர்களே, எனது அன்பு நிறைந்த வணக்கங்கள்.

இன்றைய நிகழ்வின் நோக்கத்தையும், பினனணியையும் விளக்குமாறு கோரப்பட்டுள்ளதின்படி எனது உரையை அமைக்கிறேன்.

யாழ்.மக்களிடையே அண்மையில் நடத்தப்பட்ட ஆய்விலிருந்து பெறப்பட்ட கருத்துகளை மக்களின் மதிப்பைப்பெற்ற பெரியோர்முன் வைத்து, அவர்களுடைய ஆசியுடன் அவற்றை இலங்கைத்தீவின் தென்பகுதி சமூகத்திற்கும், சர்வதேச சமூகத்திற்கும் தெரிவிப்பதே இந்த நிகழ்வின் நோக்கமாகும்.

இவ்வாறு ஒன்றோடொன்று தொடர்புடைய மூன்று விடயங்கள் வெளிவருகின்றன.

அவை - மொழி, மதம் என்ற வடிவங்களில் எம்மை எதிர்த்து நிற்கும் பேரினவாதம்.

இதன் வரலாற்றுப் பின்னணி.

இப்பேரினவாதத்தின் மேலாதிக்கத்திலிருந்து நாம் பாதுகாக்கவேண்டிய நமது சுய நிர்ணய உரிமை.

இந்த நோக்கம் சரியாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டுமென்பதற்காக முதலில் சில விளக்கங்கள் கொடுக்கப்பட வேண்டியுள்ளன.

அவை - சிங்கள மக்களையோ, பௌத்த மதத்தையோ நாம் அவமதிக்கவில்லை. மாறாக அம்மக்களையும் மதத்தையும் மதிக்கின்றோம்.

எமது தேசியத்தைப்பற்றி நாம் குறிப்பிடும்போது, பிற இனங்களின் தேசிய உணர்வையும் மதித்துத்தான் குறிப்பிடுகின்றோம்,ஆனால் எவருடைய தேசிய உணர்வும் மேலாதிக்கம் செலுத்தும் பேரினவாதமாக பூதாகாரமெடுத்து, எமது கௌரவத்தைக் காயப்படுத்தவேண்டாம் என்பதே எமது குரல்.

பேரினவாதத்தின் மத்தியிலும், தென்னிலங்கையில் அதற்கெதிரான குரல்கள் அன்றும் இன்றும் எழுதப்பட்டுள்ளன என்பதை நாம் கவனிக்கத் தவறவில்லை.

**மக்களின் கருத்து**

25 ஆண்டுகளாக எம்மை சிதைத்துவரும் போர் உருவாவதற்கு இப்பேரினவாதமே காரணம்.

இப்பேரினவாத்தை முறியடிப்பதற்கு தென்னிலங்கையில் பலம்வாய்ந்த அரசியற் சமூகமோ, அரசியற் கலாசாரமோ, தலைமைத்துவமோ இலங்கை விடுதலை பெற்ற காலத்திலிருந்து இதுவரை காணப்படவில்லை. இனிமேல் எமது எதிர்காலத்தை நாமே நிர்ணயித்துகொள்வோம்.

இதை விளக்குவதற்கு அரசியல் வரலாற்றை சற்றுப் பார்க்க வேண்டியுள்ளது.

**பேரினவாதத்தின் வெளிப்பாடுகள்**

**- பிரஜா உரிமைச்சட்டம்**

பிரித்தானிய ஆட்சியிலிருந்து இலங்கை விடுபட்டதையடுத்து, புதிய அரசு 'பிரஜா உரிமைச் சட்டம்' ஒன்றை அமுலாக்கம் செய்து, மலையகத் தமிழ்மக்களின் பிரஜா உரிமை, வாக்குரிமை ஆகியவற்றை இதன்மூலம் பறித்தது மட்டுமன்றி,ஒட்டுமொத்தமாக இலங்கை வாழ் தமழ்மக்களின் அரசியற் பேரம்பேசும் பலத்தையும் அழித்துவிட்டது.

அது ஒரு புறமிருக்க, மறுபுறம் சிங்கள மகா சபையானது சிங்களத்தை அரசகரும மொழியாகவும், பௌத்தமதத்தை அரச மதமாகவும் ஆக்கவேண்டுமென்ற கொள்கையைப் பரப்பிவந்தது. இதற்கமைய, முந்திய தசாப்தங்களில் சமஷ்டி முறைமையை முன்வைத்து தன் பரந்தமனப்பாங்கை வெளிப்படுத்திய பண்டாரநாயக்க, இப்போது சந்தர்ப்பவாதியாய் மாறி, 1956ஆம் ஆண்டுத்தேர்தலில் சிங்களம் மாத்திரம் என்ற கோஷத்தை முன்வைத்தார் அதன்மூலம் பெரும்வெற்றியீட்டினார்.

**தனிச்சிங்களம்**

'இரு மொழியென்றால் ஒரு நாடு; ஒரு மொழியென்றால் இருநாடுகள்' என்ற சிங்களப் பெரியார் ஒருவரின் எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது,1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக்கப்பட்டது. இதை எதிர்தது தமிழ்த் தலைவர்கள் நாடாளுமன்றின் முன் உண்ணாவிரதமிருந்தனர். அது ஒரு சாத்வீகப் போராட்டம். ஆனால் அதை முறியடிப்பதற்கு வன்முறை பாவிக்கப்பட்டது. இதனைக் கண்டித்து தமிழ் மக்களிடமிருந்து பெரும் எதிர்புகள் வெடித்தன. அவையெல்லாம் அஹிம்சை வடிவிலேயே அமைந்தன.

**- பண்டா - செல்வா ஒப்பந்தம்**

எதிர்புகளைச் சமாளிக்கவேண்டிய நிலையில், பிரதமர் பண்டாரநாயக்க, தமிழரசுக்கட்சித் தலைவர் செல்வநாயகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இதனையடுத்து, ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. இது சமஷ்டி அரசாங்க முறையை அடிப்படையாகக் கொண்டது.

இந்த ஒப்பந்தத்தில் -

★தமிழ்மொழி இலங்கைச் சிறுபான்மையினரின் மொழியென ஏற்றுக்கொள்ளுதல் -

★அதை வடக்கு - கிழக்கு மாகாண ஆட்சி மொழியாக்குதல் -

★வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரையில் பிராந்திய சபைகளை ஏற்படுத்தல் -

★குடியேற்றத்திட்டங்கள் மற்றும் பிரஜா உரிமைச் சட்டம் என்பவற்றை சீர்படுத்தல் -

போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டன.

ஆனால், பௌத்த தலைவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் எதிர்ப்புப் போராட்டம் நடத்தினார். இந்த எதிர்ப்புகளுக்கு முகங்கொடுக்க முடியாது, அவர்களின் முன்னே அங்கு ஒப்பந்தத்தை ஒரு தலைப்பட்சமாய் கிழித்தெறிந்தார் பிரதமர் பண்டாரநாயக்கா.

**தமிழ்ப் பிரதேசத்தில் அரசாங்க அனுசரணையுடனான குடியேற்றங்கள்**

இக்குடியேற்றங்களின் விளைவாக கிழக்குப் பிரதேசத்தில் சிங்கள மக்களின் தொகை 1946 இலிருந்து 1976 வரை 10 மடங்காகப் பெருகியது. இது தமிழ் மக்கள் மீது பாரிய பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியது. ஏற்கனவே நாடளாவிய ரீதியில் சிறுபான்மையினராயிருந்த அவர்கள், தங்கள் சொந்த மரபுவழித் தாயகத்திலேயே மேலும் சிறுபான்மையினராக்கப்பட்டனர். புதிய தேர்தற் தொகுதிகள் ஆக்கப்பட்டபோது, அவர்களின் பிரதிநிதித்துவத்தின் விகிதாசாரமும் பேரம் பேசும் பலமும் மேலும் குன்றிப்போயின.

**டட்லி-செல்வா ஒப்பந்தம்**

1965இல் மற்றுமோர் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இது பிரதமர் டட்லி சேனநாயகாவுக்கும் செல்வநாயகத்திற்கும் இடையே நடந்தது. இதில் -

★வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியை நிர்வாக மொழியாக்குவது -

★அங்கு, நீதிமன்றத்தில் தமிழ்மொழியைப் பாவித்தல் -

★காணி வழங்கும்போது குறிப்பிட்ட பிரதேசத்தில் முதலில் காணி இல்லாத தமிழ் பேசும் மக்களுக்கு, அடுத்து, வேறு இடங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்கள், மூன்றாவதாக ஏனைய மக்களுக்கும் என்ற முறையிலேயே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் போன்ற ஆலோசனைகள் இந்த ஒப்பந்தத்திலே இடம்பெற்றன.

குறைந்தளவிலான கோரிக்கைகளைக் கொண்ட இந்த ஒப்பந்தத்திற்கும் எதிர்ப்புக் காணப்பட்டது. முன்னர் பண்டா - செல்வா ஒப்பந்தத்திற்கு ஆதரவாயிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஆட்சியை இழந்ததும் இதனை எதிர்க்கும் கட்சியாக செயற்பட்டது. பௌத்த தலைவர்களும் முன்னர் போன்று எதிர்ப்பவர்களாகவே இருந்தனர். இதன் விளைவாக இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த நீண்ட காலமாக அரசினால் முடியவில்லை.

1966 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இந்த ஒப்பந்தத்தின்படி 'தமிழ்மொழி விசேட சட்டமூலம்' நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டபோது கிளம்பிய எதிர்ப்பின் காரணமாக 'டட்லி செல்வா' ஒப்பந்தம் மீண்டும் ஒருதலைப் பட்சமாகத் கிழித்தெறியப்பட்டது.

**1972ஆம் ஆண்டு புதிய அரசமைப்பு**

1970 ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றியீட்டிய கூட்டு முன்னணி 1972ஆம் ஆண்டு அரசமைப்பை புதிதாக அமைக்கும் திட்டத்தில் ஈடுபட்டபோது, சமஷ்டிக்கட்சி அரசமைப்புச் சபையிடம் வைத்த ஆலோசனைகளுள் பின் வருவனவும் அடங்கும்

★'டட்லி - செல்வா' ஒப்பந்தத்தை அரசமைப்பினுள் உள்வாங்குதல்

★தமிழ்மொழியை தமிழ் மாணவர்களின் கல்விமொழியாக அமைத்தல்

இந்த ஆலோசனைகளும் நிராகரிக்கப்பட்டன. சமஷ்டிக்கட்சி தவிர்ந்த வேறு முக்கிய தமிழ்கட்சிகள் ஒன்றுசோர்ந்து சில ஆலோசனைகளை அரசமைப்புச் சபைக்கு சமர்ப்பித்தனர்.

★தமிழ்மொழிக்கு சம அந்தஸ்து வழங்குவது -

★பிரஜா உரிமை பறிக்கப்பட்டவர்களுக்கு அதை மீண்டும் வழங்குவது -

★அரசியல் யாப்பு எந்தவொரு இனத்திற்கோ, மதத்திற்கோ பாராபட்சம் காட்டாது சமத்துவத்தைப் பேணவேண்டும். போன்ற அம்சங்களும் அங்கு அமைந்திருந்தன. -

இவையும் நிராகரிக்கப்பட்டன. அதுமட்டுமன்று, நடைமுறையிலிருந்துவந்த அரசமைப்பின் 29ஆம் அலகு புதிய அரசமைப்பில் இடம் பெறவில்லை. மத, இன, மொழி போன்ற எந்த அடிப்படையிலும், சமத்துவத்தைப் பேணி, சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதிப்படுத்தியது அந்த அலகுதான் களையப்பட்டு, பௌத்த சாசனத்திற்கு புதிய அரசமைப்பிலே விசேட முன்னுரிமை வழங்கப்பட்டது.

**1978 ஆம் ஆண்டு மற்றுமோர் அரசமைப்பு**

1978 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட அரசமைப்பும் தமிழ்மக்களின் குறைபாடுகளைக் கணக்கிலெடுக்கவில்லை. சிங்கள - பௌத்த தேசியத்தின் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தும் ஆவணமாகவே அது அமைந்தது.

தென்னிலங்கை அரசியல் சமூகத்திடமிருந்து, கௌரவமான வாழ்வை எதிர் பார்க்க முடிவில்லை.

**கல்வித் துறையில் பாகுபாடு**

பேரினவாதத்தின் இன்னுமோர் வெளிப்பாடாக 1970இல் கல்வித்துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட 'தரப்படுத்தல்' தமிழ் மாணவ, மாணவிகளின் உயர்கல்விக்கு பாரிய தடையை ஏற்படுத்தியது. ஏற்கனவே 'சிங்களம் மாத்திரம்' என்ற சட்டமும் தமிழ் மக்களுக்கெதிரான இனத்துவேசமும் தமிழ் மக்களின் வேலை வாய்ப்பு, பதவி உயர்வு என்பவற்றைப் பாதித்து வந்தன.

**'சமஷ்டி' கொள்கையைக் கைவிட்டு 'தனிநாடு' என்ற கொள்கை**

இவற்றை எல்லாம் தமது இன அடையாளத்தையே அழித்துவிடக்கூடிய செயற்பாடுகளாகக் கண்டபோதே மக்கள் மத்தியில் 'தமிழ்த் தேசிய' உணர்வு வலுப்பெற்றது.

1976இல் வட்டுக்கோட்டை மாநாட்டில் தனிநாடாகப் பிரிந்து செல்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. அடுத்த ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் தனிநாடு என்ற கோட்பாட்டில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்குக் கிடைத்த வெற்றி தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டை தெட்டத் தெளிவாகக்காட்டியது.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமானது 'தனிநாடு' என்ற கோரிக்கையுடன் ஆரம்பிக்கவில்லை. பிளவுபடாத நாட்டுக்குள் அதிகாரத்தைப் பகிர்ந்து தமிழ்மொழி, கலாசாரம் ஆகியவற்றைப் பேணுவதற்கும் சமூக பொருளாதார வாழ்வில் சமமான உரிமைகளைப் பெற்றனுபவிப்பதற்குமான அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்பதே அவர்களுடைய ஆரம்ப இலக்காயிருந்தது.

அதுமட்டுமன்றி நாடு பிளவுபடுவதை அவர்கள் அப்போது எதிர்த்தார்கள். 1970ஆம் ஆண்டுத் தேர்தலிலே "தனிநாடு" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இரு தமிழ் வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். இரு தமிழ்த் தொகுதிகளில் போட்டியிட்டார்கள்.

அவர்கள் தோல்வியையே தழுவிக் கொண்டார்கள். ஏனென்றால் நாட்டைப் பிளவு படுத்துவோரை ஆதரிக்க வேண்டாம் என்று சமஷ்டிக் கட்சியினர் பிரசாரம் செய்தனர். அவர்கள் பிரிவினையை எதிர்த்தார்களென்பதை தெட்டத் தெளிவாய்க்காட்டினார்கள்.

ஆனால் இவர்களும் படிப்படியாக "தனிநாடு" என்ற நிலைப்பாட்டிற்குத் தள்ளப்பட்டனர்.

தேசிய அடையாளத்தைப் பொறுத்த வரையில் இன ரீதியிலே நாம் தமிழர், சிங்களவர் என வேறுபட்ட சமூக - கலாசார வரலாற்றைக் கொண்டிருந்தாலும் தேச ரீதியிலே "இலங்கையர்" என்ற பெயரைப் பேணுவோம். வேறுபாடுகளின்படி ஒவ்வொரு பகுதியும் தன் சிறப்புத் தனித்துவத்தை பேணும் அதேவேளை "தேச மட்டத்திலே இலங்கையர் என்ற பாகுபாடற்ற, பொது அடையாளத்தையே விரும்புகின்றோம்" என்ற கருத்தையே கொண்டிருந்தனர். ஆனால் அந்தக் காலகட்டத்தில் அதைப் புறக்கணித்த பெரும்பான்மையின அரசியற் சமூகமானது "இலங்கையர் = சிங்கள, பௌத்த மக்கள்" என்ற சமன்பாட்டையே முன்வைத்தது.

**இலக்கை அடைவதற்கு கையாளப்பட்ட வழி?**

உரிமைகளைப் பெற்றுக் கொள்வதென்னும் இலக்கை அடைவதற்கு அவர்கள் முதலில் கையாண்ட கருவி வன்முறையல்ல, சாத்வீகமாகும், ஆனால்....

1956ஆம் ஆண்டு "தனிச்சிங்களம்" என்ற சட்டத்தை எதிர்த்து தமிழ்மக்கள் அமைதியாக சத்தியாக்கிரகம் இருந்தனர். அவர்களுக்கெதிராக வன்முறை கட்டவிழ்க்கப்பட்டது. இதில் 150 பேர் சிங்களக் கும்பல்களினால் கொல்லப்பட்டனர்.

1958இல் 'பண்டா - செல்வா" ஒப்பந்தம் கைவடப்பட்டதை எதிர்த்து மீண்டும் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். அதற்கு கிடைத்த பரிசும் வன்முறைதான். சனக் கும்பல்களால் நூற்றுக்கணக்கான தமிழ்மக்கள் கொல்லப்பட்டதுடன் வீடுகளும் உடைமைகளும் தீககிரையாக்கப்பட்டன.

1961ஆம் ஆண்டு "தனிச்சிங்களம்" என்ற சட்டத்திற்கு எதிராக சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டபோது யாழ்ப்பாணத்திற்கு முதன் முறையாக அனுப்பப்பட்ட இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் (குறைந்தது) ஒரு பொதுமகன் கொல்லப்பட்டார். பலர் காயப்பட்டனர். அத்துடன் தமிழ் நாடாளுமன்ற அங்கத்தினர் பலர் உட்படப் பல தமிழ்த் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர். மீண்டும் அஹிம்சைக்குக் கிடைத்த பதில் வன்முறையே.

1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் அமைதியாக நடந்துகொண்டிருந்த உலக தமிழாராய்ச்சி மாநாட்டின்போது பொலீஸார் மேற்கொண்ட வன்முறையில் 9 தமிழ்மக்கள் கொலலப்பட்டனர்.

1977ஆம் ஆண்டு தேர்தலையடுத்து (ஒரு மாதத்தின் பின்) பெரும் இனக்கலவரம் ஏற்பட்டது. முதல் இரு வாரங்களிலேயே நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் சிங்களக் கும்பல்களால் கொல்லப்பட்டனர்.

1977ஆம் ஆண்டு கலவரத்திற்குப் பின்னரும் அத்தகைய மோசமான கலவரங்கள் இடம்பெற்றன. 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட கலவரங்கள் குறிப்பிடத்தக்கவை. அரசைச் சார்ந்தவர்களின் ஈடுபாடும் இவற்றில்

(13 ஆம் பக்கம் பார்க்க)

# நேர்முகப் பரீட்சைக்கு...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்ககாந்தன் (அராலி மேற்கு), கே.கார்த்திகா (கந்த ரோடை), எஸ். பகிலன் (அம்பலவாணர் ரோட், யாழ்ப்பாணம்), எஸ்.கங்கதாரணி (தாவடி).

எஸ்.கஜேந்தினி (கைதடி வடக்கு), யுகைலாயபிள்ளை (ஆனைக்கோட்டை வடக்கு), கே.கஜன் (இணுவில் கிழக்கு), பி.கஜனி (இணுவில் மேற்கு), ஜி.கஜயந்தன் (ஏழாலை தெற்கு), கே.கஜேந்தினி (மட்டுவில் மேற்கு), எம்.கஜந்தி (அளவெட்டி தெற்கு), ஏ.கஜேந்திரன் (அளவெட்டி வடக்கு), கே.கஜீதன் (மருதடி வீதி, சாவகச்சேரி வடக்கு), எ.கஜேந்தனி (சந்தை வளவு, சுன்னாகம் வடக்கு), பி.கஜேன் (சுதுமலை வடக்கு), பி.கஜேந்திரன் (கலாசாலை வீதி, திருநெல்வேலி), எம்.கஜேந்தினி (தாவடி வடக்கு) -

எஸ்.கஜேந்தினி (வன்னியசிங்கம் வீதி, கைதடி வடக்கு), கே.கஜேந்திரன் (மீசாலை வடக்கு), என்.கஜேந்திரன் (மானிப்பாய் வீதி, இணுவில்), கே.கஜேந்திரப்பிரவன் (மணற்புலம் அளவெட்டி கிழக்கு), எம்.கலாஜினி (மல்லாகம்), எஸ்.கலையரசி (உடுவில் வீதி, மானிப்பாய்), வீ.கலைச்செல்வி (களபூமி, காரைநகர்), எஸ்.கலைச்செல்வன் (கோயில்வீதி, நல்லூர்), எஸ்.கலைச்செல்வி (ஆவரங்கால்), பி.கலைச்செல்வி (உடுவில் மேற்கு), எஸ்.கலைச்செல்வி (உடுவில் தெற்கு), கே.கலைச்செல்வி (தொல்புரம் மத்தி), என்.கலைச்செல்வி (மருதனார்மடம்), ரி.கலைச்செல்வி (கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்), எ.கலைஜோதி (ஆவரங்கால்), எஸ்.கலைமகள் (புத்தூர் வீதி, மீசாலை வடக்கு), எம்.கலைமதி (தொட்டிலடி, சங்கானை), எஸ். கலைமதி (திருநெல்வேலி கிழக்கு), யு.கலைமதி (குளப்பிட்டி லேன், கொக்குவில் கிழக்கு) -

எஸ்.கலைராணி (முடமாவடி, நல்லூர்), பி.கலைதேவி (கம்பஸ் லேன், திருநெல்வேலி), எஸ்.கலைவான (உடுவில் கிழக்கு), ஆர்.கலைவாணி (அச்செழு), எஸ்.கலைவாணி (தையிட்டிப்புலம், தெல்லிப்பழை), ரி.கலைவாணி (அல்லாரை வீதி, மீசாலை கிழக்கு), வி.கலைவாணி (வியாபாரி மூலை, பருத்தித்துறை), எஸ்.கலைவாணி (அல்வாய்), கே.கலையழகன் (காரைக்காட்டு லேன், வண்ணார்பண்ணை), கே.கலையமுதா (காரைக்காட்டு லேன், வண்ணார்பண்ணை), ரி.கலையமுதன் (மதவடி, தொண்டைமானாறு), ஜி.கலையரசி (கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்), ஆர்.கலாஜோதி (சண்டிலிப்பாய் தெற்கு), கே.கலாறஞ்சினி (செம்பியன்பற்று மேற்கு), பி.கலாரூபி (அச்செழு), என்.கலாசக்தி (காரைநகர்), என்.கலாதரன் (ஐயனார் கோயில், காரைநகர்), எஸ்.கலாதரன் (திருநெல்வேலி, கோப்பாய்), எஸ்.கலாவண்ணன் (கொக்குவில் தெற்கு), ஜே.எஸ்.கலாவதி (நல்லூர்), ஆர்.கலாவதி (காரைக்காட்டு லேன், வணணார்பண்ணை), வி.கலைவாணி (புன்னாலைக்கட்டுவன் மேற்கு, சுன்னாகம்), கே.கலியுகன் (கொட்டடி, யாழ்ப்பாணம்) -

ம.பாஸ்கரன் (கரவெட்டி கிழக்கு, கரவெட்டி), கே.பவாநந்தினி (விளையாட்டரங்க வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்), க.பவானி (கல்லோடை, ஏழாலை தெற்கு, ஏழாலை), எஸ்.பவானி (இணுவில் தெற்கு, இணுவில்), எஸ்.பவானி (நீலியம்பனை, மல்லாகம்), ரி. பவானி (சங்கத்தானை, சாவகச்சேரி), பி.பவதாரணி (கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்), வி.பவதீஸ்வரன் (மயிலணி வடக்கு, சுன்னாகம்), எஸ்.வீஸ்மன் (இணுவில் கிழக்கு, சுன்னாகம்), கே.பாமினி (கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்), எஸ்.பாஸ்கரரவிவர்மன் (நாவலர் வீதி, மாதகல்), வி.பவதரனன் (வல்வை வீதி, தொண்டைமானாறு), க.பிரியதர்சினி (சித்தர்வளவு, சுழிபுரம்).

க.பிருந்தா (இளவாலை வடக்கு, இளவாலை), பி.பிரபாகரன் (நுணாவில் மேற்கு, சாவகசசேரி), ந.பிரமிலா (நீர்வேலி வடக்கு, நீர்வேலி), க.பிறற்லீ ஜெனால்ட் (கச்சேரி ரெயில்வேக் கடவை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்), எஸ்.பிரியற்நிலா (கோயில வீதி, யாழ்ப்பாணம்), ஐ.பிரிந்தா (சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்), எம்.பிரிந்தா (ஏழாலை மேற்கு, சுன்னாகம்), எஸ்.பிரிந்தன் (இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி), எ.பிறிற்றோ டக்ளஸ் (2ஆம் குறுக்குத்தெரு பாஷையூர், யாழ்ப்பாணம்).

வை.பிருந்தா (புலோலி தெற்கு, புலோலி), என்.கமிலஸ் (4ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை), என்.கனிஸ்ரர் (உமாகாந் அரசடி ரோட, நல்லூர், யாழ்ப்பாணம்), கே.கரோலினி (கண்டி வீதி, யாழ்ப்பாணம்). எ.கௌசலா (மவுண்ட்காமல் ரோட், யாழ்ப்பாணம்), எஸ்.செந்தூரன் (மீசாலை வீதி, மீசாலை), கே.சச்சிதானந்தன் (ஆழியவளை, தாளையடி), ஜி.சந்திரபாலன் (கற்குழி வடக்கு, சாவகச்சேரி), பி.சந்திரதேவி (கரணவாய் மத்தி, கரவெட்டி), எ.சந்திரகலா (குருக்கள் கிணற்றடி, ஞானேஸ்வரன், அளவெட்டி), எஸ்.சந்திரகுமார் (செம்பியன்பற்று தெற்கு, தாளையடி).

(வளரும்)

# நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பட்டதாரிகள்

**கைதடி, ஜூன் 20**

**பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டாயிரத்து 930 பேர் வடகது - கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக் குழுவினால் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் பட்டுள்ளனர்.**

**எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும் இந்த நேர்முகப் பரீட்சைக்கு 600 பட்டதாரிகள் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் ஒரு தொகுதியினரின் விவரம் நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தது. ஏனைய பட்டதாரிகளின் விவரம் தொடர்ந்து வெளியாகும்.**

ரி.ராஜினி (கரம்பைக்குறிச்சி மேற்கு வரணி), பி.ராகுலன் (சங்கத்தானை, சாவகச்சேரி), ரி.ராகுலன் (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), பி.ரகுநந்தன் (நெல்லியடி, கரவெட்டி), என்.ரகுநாத் (உடுவில் கிழக்கு), எஸ்.ரகுராம் (கேரவில், தொண்டைமானாறு), வி.நகுநாதன் (வடலியடைப்பு, பண்டத்தரிப்பு), கே.ராஜினி (கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை), எஸ்.ராகினி (கொக்குவில் கிழக்கு), ஜெ.ராஜ்குலேன்சன் (கரம்பொன்கிழக்கு, ஊர்காவற்றுறை), எஸ்.ராஜசெல்வி (68/5, இராசாவின் தோட்டம்), ஆர்.இராஜகோபால் (விக்னேஸ்வரா வீதி, சங்கானை), வி.இராஜகுகன் (பறளாய் வீதி, சுழிபுரம்), சி.இராஜலிங்கம் (வெற்றிலைக் கேணி முள்ளியான்), எஸ்.இராஜலோஜினி (கச்சாய் தெற்கு, கொடிகாமம்), எஸ்.இராஜலக்சுமி (வதிரி, கரவெட்டி), எஸ்.இராஜலக்சுமி (அராலி மத்தி), ஈ.பி.இராஜநாதன் (பத்தாவத்தை, இளவாலை), ஆர்.இராஜ்பவன் (வதிரி, கரவெட்டி), கே.இராஜி (புகையிரத நிலைய வீதி, மல்லாகம்), ஆர்.ரஜிதா (கச்சாய் வீதி, கொடிகாமம்), எஸ்.ரஜீவன் (கோண்டாவில் மேற்கு), எஸ்.ரஜீவன் (நீர்வேலி மேற்கு), எஸ்.இராஜேந்திரன் (டச்சு வீதி, சாவகச்சேரி), ஆர.இராஜேஸ்கண்ணன் (இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி), எஸ்.இராஜேஸ்வரன் (நுணாவில் மேற்கு), எ.இராஜேஸ்வரி (புலோலி மேற்கு), ஜி.இராஜேஸ்வரி (செல்லர் வீதி, நல்லூர்), ஜி.இராஜேஸ்வரி (வதிரி, கரவெட்டி), பி.இராஜேஸ்வரி (முருகமூர்த்தி வீதி, சங்கானை), ரி.ரஜிதா (மீசாலை மேற்கு), ஆர்.ரசிகா (நாயன்மார் வீதி, நல்லூர்), எ.ராஜினி (சுன்னாகம் மேற்கு), கே.ராஜினி (தெல்லிப்பழை கிழக்கு), எஸ்.ராஜினி (உடுவில் கிழக்கு), எஸ்.ராஜினி (கோண்டாவில் மேற்கு)

ஏ.றஜனி (துன்னாலை மேற்கு), எம்.ரஜனி (கொக்குவில் மேற்கு), எம்.ராஜினி (பருத்தித்துறை வீதி, நல்லூர்), என்.ரஜனி (கொக்குவில் கிழக்கு), பி.ரஜனி (புலோலி கிழக்கு), ஆர்.ரஜனி (கைதடி தெற்கு), எஸ்.ரஜனி (கோண்டாவில் மேற்கு), பி.ரஜனிகாந்தன் (உரும்பிராய் மேற்கு), ஆர்.இராஜராஜன் (சுன்னாகம் மேற்கு), கே.இராஜராஜேஸ்வரி (மட்டுவில் தெற்கு), எஸ்.இராஜரத்தினம் (இயற்றாலை, வரணி), எஸ்.இராஜரத்தினம் (சாவகச்சேரி வடக்கு), ஏ.இராஜரூபினி (கொழும்புத்துறை), எஸ்.இராஜசேகர் (யாழ்ப்பாணம்), கே.இராஜசிவம் (அராலி தெற்கு), ரி.இராஜசிறிதரன் (துன்னாலை வடக்கு), ரி.இராஜசிறிகாந்தன் (துன்னாலை வடக்கு), கெ.இராஜதுரை (கச்சாய் வீதி, கொடிகாமம்), ஏ.இராஜவதனி (பிராந்திய நிர்வாக அலுவலகம், யாழ்ப்பாணம்), கே.ரஜிதா (பருத்தித்துறை வீதி, கொடிகாமம்), எம்.ரஜிதா (சரசாலை வடக்கு), ஆர்.ராஜிதன் (அல்வாய் கிழக்கு), ஆர்.ராஜ்குமார் (வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்), எஸ்.ராஜ்குமார் (செம்பியன்பற்று தெற்கு), ரி.ராஜ்மோகன் (நல்லூர் வடக்கு), எ.ராஜ்மேஸ் (கோயில் வீதி, நல்லூர்), ஆர்.ரமணகிருஷ்ணா (கண்டி வீதி, சாவகச்சேரி), கே.ரமணகுமார் (ஏழாலை கிழக்கு), ஏ.றமணன் (கரணவாய் தெற்கு), எஸ்.றமணன் (சங்குவேலி, மானிப்பாய்), எல்.றமணன் (ஆலங்குளம் வீதி, சண்டிலிப்பாய்), எம்.றமணன் (கரணவாய் தெற்கு), என்.றமணன் (தொல்புரம் கிழக்கு), ஆர்.றமணன் (நாவலர் வீதி, யாழ்ப்பாணம்), ஆர்.றமணன் (கோப்பாய் மத்தி), எஸ்.இராமநாதன் (அச்செழு நீர்வேலி), வி.றமணி - (சண்டிலிப்பாய் மேற்கு), என்.இராமதாஸ் (அல்வாய் மேற்கு), ரி.றமிலாதேவி (நீராவியடி யாழ்ப்பாணம்), ரி.றமேஜினி (இணுவில் மேற்கு), எஸ்.ரமேஷ் (ஏழாலை மேற்கு), எ.றமேஷன் (மூளாய் வீதி வட்டுக்கோட்டை), பி.றமேஷ் (முகாம் வீதி ஊர்காவற்றுறை), ஆர்.றமேஷ் (திருநெல்வேலி கிழக்கு), ஆர்.ரமேஷ் (கச்சாய் வீதி கொடிகாமம்), ஆர்.றமேஷ் (கரவெட்டி கிழக்கு),ரி.றமேஷ் (அராலி வீதி, சங்கானை), வி.றமேஸ் (சாவற்காடு, ஆனைக்கோட்டை), ஆர்.றமேஷன் (அல்வாய் மேற்கு), ஆர்.றமேஸ்வரன் (கந்தரோடை சுன்னாகம்). என்.றமேஸ்வரன் (சுழிபுரம் மத்தி), பி.றமேஸ்வரன் (பொலிகண்டி, வல்வெட்டித்துறை), ரி.றமேஸ்வரி (தாவடி கொக்குவில்), பி.ரம்யா (ஊரெழு மேற்கு), எ.றஞ்சினி (அல்வாய் கிழக்கு), கே.ரங்கநாதன் (கரம்பைக்குறிச்சி வரணி), எஸ்.றஞ்சினி (காளி கோவிலடி, மல்லாகம்), ஆர்.ராணிமலர் (கொடிகாமம்), என்.ரஞ்சனா (நுணாவில் மேற்கு) எஸ்.றஞ்சனா (இடைக்குறிச்சி வரணி), எம்.றஞ்சினி (மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டை), எஸ்.றஞ்சினி (கொக்குவில் மேற்கு), கே.றஞ்சிதமலர் (ஊரெழு மேற்கு), எஸ்.றஞ்சிதமலர் (வண்ணார்பண்ணை யாழ்.), ஆர்.ரஞ்சிதன் (அல்வாய் கிழக்கு), கே.றஞ்சிதமலர் (மீசாலை மேற்கு), என்.றஞ்சுதமலர் (திருநெல்வேலி கிழக்கு), என்.ராஜகுமார் (புலோலி வடக்கு), என்.ராஜ்குமார் (உரும்பிராய் மேற்கு), ஆர்.இராஜலட்சுமி (நவாலி வடக்கு), எம்.இராஜலிங்கம் (தாவளை, இயற்றாலை).

ரி.சிவநேசன் (தம்பாலை, பருத்தித்துறை), வி.சிவநேசன் (ஆழியவளை, தாழையடி), ரி.சிவநேசராஜா (புத்தூர் மேற்கு), கே.சிவனேஸ்வரி (விருமர் கோவிலடி, அல்வாய் வடக்கு), ஏ.சிவந்தினி (467/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்), ஏ.சிவந்தினி (அச்சுவேலி தெற்கு), எம்.சிவானி (ஆர்.சி. வீதி, கரவெட்டி வடக்கு), எஸ்.சிவானி (பழைய ரயில் நிலைய வீதி, கொக்குவில் கிழக்கு), பி.சிவபாலன் (முருகமூர்த்தி கோவிலடி, ஆனைக்கோட்டை), கே.சிவப்பிரியா (கேசாவில் பிள்ளையார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை), எம்.சிவப்பிரகாசம் (பிள்ளையார் கோவிலடி, அச்சுவேலி தெற்கு), கே.சிவப்பிரகாசம் (டச்சு வீதி, உடுவில்), கே.சிவராஜ் (காந்தியூர், புலோலி வடக்கு), எஸ்.சிவராஜ் (காளிகோவில் வீதி, சுன்னாகம் கிழக்கு), கே.சிவராஜன் (பொன்னம்பலம் வீதி, அல்வாய் கிழக்கு), ஈ.சிவரமி (இணுவில் மேற்கு), எஸ்.சிவரஞ்சிதன் (கட்டுடை, மானிப்பாய்), எஸ்.சிவரங்கன் (சுளிபுரம் மேற்கு), எஸ்.சிவரஞ்சினி (தொல்புரம் கிழக்கு), ஆர்.சிவரஞ்சன் (மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம்), எஸ்.சிவரஞ்சன் (நுணாவில் மத்தி), ஏ.சிவரஞ்சனி (சிவகிரி, மீசாலை வடக்கு), எஸ்.சிவர்ஞ்சனி (தொல்புரம் கிழக்கு சுழிபுரம்), எஸ்.சிவரஞ்சனி (பலாலி றோட் கோண்டாவில்), ஆர்.சிவரஞ்சினி (ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்),

எஸ்.சிவரஞ்சனி (நாவலர் வீதி, யாழ்ப்பாணம்), ஆர்.சிவரூபி (செருக்கப்புலம், தெல்லிப்பழை), ஆர்.சிவசக்தி (பிறவுண் றோட், யாழ்ப்பாணம்), ஆர்.சிவசக்தி (சீனியர் வீதி, யாழ்ப்பாணம்), ரி.சிவசக்தி (தலைவாழி கொக்குவில்) எஸ்.சிவசங்கர் (துன்னாலை மத்தி, கரவெட்டி), எம்.சிவசற்குணம் (தாவடி வடக்கு, கொக்குவில்), எம்.சிவசெந்தூரன் (சங்கரப்பிள்ளை றோட், ஆனைக்கோட்டை), பி.சிவசகீலா (உசன், மருசுவில்), எஸ்.சிவசிறி (ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குழி),

எஸ்.சிவசுகந்தினி (உடுவில் மேற்கு, உடுவில்), எஸ்.சிவசுந்தர் (பிரதேச செயலகம் ஒட்டுசுட்டான்), எஸ்.சிவசுந்தரம் (கொழும்புத்துறை), எஸ்.சிவசுதன் (கொக்குவில் மேற்கு, கொக்குவில்), இ.சிவதர்சினி (ஓடை வீதி, வண்ணார்பண்ணை), ரி.சிவதர்சினி (மாரியம்மன் வீதி, திருநெல்வேலி), ஆர்.சிவதர்சிகா (நீர்வேலி மத்தி, நீர்வேலி), எஸ்.சிவதர்சினி (ஐயனார் வீதி, சுன்னாகம்), கே.சிவதாசன் (கோண்டாவில்), எஸ்.சிவந்தி (மூளாய் மத்தி, சுழிபுரம்), ஜி.சிவவதனி (உடுவில் தெற்கு, சுன்னாகம்), எம்.சிவயாழினி (அம்பலவாணர் வீதி, உடுவில்), எஸ்.சிவாந்திரன் (கொழும்பு-13), கே.சியமளா (புத்தூர் மேற்கு, புத்தூர்), பி.சியமளா (கெருடாவில், தொண்டைமானாறு),

பி.சியாமினி (கொடிகாமம்), எஸ்.சங்கரதாஸ் (நுணாவில் மேற்கு, சாவகச்சேரி), என்.சோபனா (அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு), எஸ்.சோபனா (கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு), எஸ்.சோபிதா (கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்), என்.சோமஸ்கந்தசர்மா (அராலி வடக்கு, வட்டுக்கோட்டை), பி.சோமசுந்தரம் (மல்லிகை வடக்கு, காரைநகர்), எம்.ஐ.சூசைதாசன் (கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்), பி.சோபிதா (அளவெட்டி வடக்கு, அளவெட்டி),

என்.சொருபி (தாவடி வடக்கு, கொக்குவில்), என்.சோதிரூபன் (புற்றளை, புலோலி), எஸ்.சி.சிறிறங்கன் (கரணவாய் கிழக்கு, கரவெட்டி), எஸ்.சிறிசிவசகிதா (அம்பலவாணர் வீதி, அத்தியடி), பி.சிறிபவன் (வல்லை வீதி, சங்கானை), கே.சிறிதேவி (அரசடி வீதி, கந்தர்மடம்), பி.சிறிகீதா (நெல்லியடி, கரவெட்டி), எஸ்.சிறிகரன் (கோப்பாய் தெற்கு, கோப்பாய்), எஸ்.சிறிகரன் (சிவன்கோயில் வீதி, சித்தன்கேணி), ஏ.சிறிஜனனி (மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்),

ஏ.சிறிஜெயந்தி (சண்டிலிப்பாய் வடக்கு, சணடிலிப்பாய்), வி.சிறிகமலேஸ்வரி (விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு), எஸ்.சிறிகண்ணன் (இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்), ஜெ.சிறிகாந் (நாவலடி தெற்கு, மானிப்பாய்), ஆர்.சிறிகாந்தன் (கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை), எஸ்.சிறிகாந்தன் (கில்னர் லேன், யாழ்ப்பாணம்), கே.சிறிஸ்கந்தராசா (இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி), எஸ்.சிறிகாந்தசேகரம் (நெல்லியடி கரவெட்டி), ரி.சிறிகரன் (நீர்வேலி தெற்கு, நீர்வேலி), எஸ்.சிறிகிருஸ்ணா (சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் தெற்கு), வி.சிறிகுகன் (அராலி வடக்கு, வட்டுக்கோட்டை),

என்.சிறிகுமார் (கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு), பி.சிறிகுமார் (அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு), எஸ்.சிறிமதி (செம்மணி வீதி, நல்லூர்), பி.சிறிமதி (இணுவில் தெற்கு, சுன்னாகம்), எம்.சிறிமுருகவேள் (பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்), ரி.சிறிநந்தினி (கந்தபுர வதி, கந்தர்மடம்), கே.சிறினிராஜா (புலோலி வடக்கு, பருத்தித்துறை) -

பி.ஜெயரூபன் (முனாமலை வீதி மானிப்பாய்), என்.ஜெயரூபன் (தும்பளை), பி.ஜெயரூபன் (கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு), ரி.ஜெயருபன் (சிவன்கோயில் வீதி, காரைநகர்), சி.ஜெயரூபன் (கைதடி தெற்கு), வி.ஜெயசங்கர் (வசாவிளான் கிழக்கு), கே. ஜெயசீலன் (கரவெட்டி கிழக்கு), என்.ஜெயசீலன் (மட்டுவில் தெற்கு), எஸ்.ஜெயசீலன் (காளி கோயிலடி, சுழிபுரம்), எஸ்.ஜெயசீலன் (புங்கன்குளம் றோட், யாழ்ப்பாணம்), எஸ். ஜெயசீலன் (கொழும்பு -06), ரி.ஜெயசாந்தினி (சிறுப்பிட்டி மத்தி), எம்.ஜெயசிறி (கனகரத்தினம் வீதி, வட்டு.தென்மேற்கு), கே.ஜெயசோதி (தும்பளை), வி.ஜெயசோதி (ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), என்.ஜெயசுரேஷ் (ஏழாலை தெற்கு), எம்.ஜெயசுதா (உரும்பிராய் கிழக்கு), ஆர்.ஜெயசுதா (இராஜ வீதி, கோப்பாய்), எஸ்.ஜெயசுதா (சிறுப்பிட்டி தெற்கு), எ.ஜெயசுதன் (சிவன் கோயிலடி, வட்டுக்கோட்டை), யு.ஜெயதாரணி (நந்தாவில் அம்மன் வீதி, கோண்டாவில் மேற்கு), எஸ்.ஜெயதர்ஜினி (தவசிகுளம், மிருசுவில்), எம்.ஜெயதர்ஜினி (பண்ணாகம்), கே.ஜெயதாஸ (அல்வாய் கிழக்கு), வி.ஜெயதாசன் (திருநெல்வேலி), எம்.ஜெயதேவா (கொழும்பு-06) என்.ஜெயதேவ (நாவலர் றோட, யாழ்ப்பாணம்), எல்.வி. ஜெயதிலக் (வேம்படி றோட், யாழ்ப்பாணம்), என்.ஜெயவாணி (கரவெட்டி வடக்கு), எஸ். ஜெயவரதன் (புன்னாலைக்கட்டுவன் தெற்கு), ஆர்.ஜெயவதனா (மந்துவில் கிழக்கு), எ.ஜெயவதனி (கோண்டாவில் மேற்கு), பி.ஜெயவதனி (ஊரிக்காடு, வல்வெட்டித்துறை), வி.ஜெயவதனி (புன்னாலைக்கட்டுவன் தெற்கு), எம். ஜெனிதா (கட்டைப்பிராய்), டபிள்யூ.ஜோண் பில்லா (என்.சி. றோட், திருகோணமலை), எஸ். ஜோசப் ஜேசுராசா (அல்வாய் வடகிழக்கு), பி.ஜோதிலக்சுமி (இணுவில் கிழக்கு), ஜே. சுரேந்திரன் (கரவெட்டி மேற்கு), எ.யூட் சுதர்சன் (யாழ்ப்பாணம் றோட், மானிப்பாய்), எவ். யூட் வில்ப்றேட் (6ஆம் வட்டாரம், நெடுந்தீவு), எல்.யுக்சி (சென். ஜேம்ஸ் வீதி, ஊர்காவற்றுறை), எஸ்.யூத்திராணி (பாஷையூர்), வி.யூத்ராஜ் (உடுவில் சுன்னாகம்), வி.யூலிஸ் (4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்), ரி.யூறிசன் ஜெனராஜ் (அல்வாய் வடகது), ஜே.யஸ்ரின் (மருதடி வீதி, நல்லூர்), ஜே.டி. யஸ்ரின் (மருதடி வீதி, நல்லூர்), எ.யஸ்ராஸ் (செல்லாச்சியம்மையார் வீதி, சுன்னாகம்), எஸ்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## சிறந்த வை.எம்.சி.ஏ.தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூன்20

இலங்கையில் உள்ள 38 வை.எம்.சி.ஏ.அமைப்புக்களில் 2004ஆம் ஆண்டுக்கான சிறந்த வை.எம்.சி.ஏஆக யாழ். வை.எம்.சி.ஏ.தெரிவுசெய்யப்பட்டுள்ளது. நேற்று மாலை யாழ். வை.எம்.சி.ஏ. கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபையின் 40ஆவது பொதுக்கூட்டத்தில் இவ் விருதுவழங்கப்பட்டது.

கடந்த 2003ஆம் ஆண்டுக்கான சிறந்த வை.எம்.சி.ஏயாக யாழ். வை.எம்.சி.ஏ. தெரிவுசெயயப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-190)




சாவகச்சேரி,
மட்டுவில் வடக்கு,
**குகதாஸ் , சசிகலா தம்பதிகளின்**

இரட்டையர்களான செல்வன் குகதாஸ் சக்திஹரன் அவர்களும் செல்வன் குகதாஸ் கரிகரன் அவர்களும் இன்று(20.06.2005) திங்கட்கிழமை தமது முதலாவது பிறந்தநாளைத் தமது இல்லத்தில் கொண்டாடுகின்றார்கள்.

**இவர்களை,**

அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், அத்தைமார், மச்சாள்மார், மச்சான்மார், பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, சுவிஸ்-மாமா, மாமி, மச்சான், மச்சாள் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் இறைவனருள் பெற்றுச் சீரும் சிறப்புமாய்ப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

**மட்டுவில் வடக்கு,**
**சாவகச்சேரி.** (C\43470) (56)

*தகவல்:*
***திரு.திருமதி குகதாஸ் சசிகலா.***

# வலி. கிழக்குப் பிரதேச சபையின் புதிய செயலர் இன்று பதவியேற்பு

அச்சுவேலி,ஜூன்20

வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளராக நியமிக்கப்பட்ட த.நடராசா இன்று முதல் தமது பதவியைப் பெறுப்பேற்கவுள்ளார்.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் பதில் செயலாளராக இதுவரை காலமும் கடமையாற்றிய க.இராசதுரை சுழிபுரம் பிரதேச சபைக்கு செயலாளர் பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் செயற்படும்படியாக இந்த நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும், வலி.கிழக்குப் பிரதேச சபையில் கடமையாற்றிய க.இராசதுரை இதுவரைகாலமும் பதவிப்பொறுப்புகளை ஒப்படைக்காமையினால் இழுபறிநிலை நிலவி வந்தது.

இந்த விடயத்தில் வடக்கு- கிழக்கு மாகாண ஆளுநரின் தலையீட்டை அடுத்து உடனடியாகச் செயற்படும்படியாக வடக்கு- கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் வெள்ளிக்கிழமை அவசர உத்தரவாக இரண்டுபேரையும் உரிய இடங்களில் பதவிகளைப் பொறுப்பேற்குமாறு பணித்துள்ளார்.

வலி.கிழக்குப் பிரதேசசபையின் செயலாளரின் இடமாற்றம் தொடர்பாக கடந்த வியாழன், வெள்ளி ஆகிய இரு தினங்களிலும் வலி.கிழக்குப் பிரதேச சபையில் மறியல் போராட்டம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (ஐ-11)

## நீர்வேலி பாடசாலைகளின் பரிசளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்20

நீர்வேலி நற்பணிச்சங்கம் - சுவிஸ் அனுசரணையுடன் நடத்தும் நீர்வேலி அணியப் பாடசாலைகளின் பரிசளிப்புவிழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் விழா ஒழுங்கமைப்பின் தலைவர் அதிபர் இ.குணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ் கல்வி வலய அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம், நீர்வேலி நற்பணிச்சங்க இணைப்பாளர் கா.யுவனேசன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக கோப்பாய் அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.செம்பருதி ஆகியோரும் கலந்துகொள்வர்.

நீர்வேலி அணியப் பாடசாலைகளின் பட்டியலில் அடங்கும் பாடசாலைகளாக நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாசாலை, நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை, நீர்வேலி சீ.சீ.த.க.பாடசாலை, சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை, சிறுப்பிட்டி இ.த.க.பாடசாலை, நீர்வேலி தெற்கு இ.த.க.பாடசாலை, அச்செழு மெ.மி.த.க.பாடசாலை என்பன அமைகின்றன. (எ-69)

18.06.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300347420 இலிருந்து 300365038 வரை

சீட்டிழுப்பு இல. 1616

01 10 19 28 சுப்பர் எண் 12

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.1,28,18,500/- வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 01 | 1,28,18,500/- | 1,28,18,500/- |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 34 | 5,000/- | 1,70,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 468 | 1,000/- | 4,68,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,478 | 500/- | 7,39,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 22,954 | 40/- | 9,18,160/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 21,808 | 20/- | 4,36,160/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,24,853 | 10/- | 32,48,530/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 2,02,98,350/-

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 20,00,000/-

300348931-6-80
300350207-4-86
300364856-0-74
300356294-3-31
300348249-6-79

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33,செனற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## கட்டுத்துவக்கு வெடித்து குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி,ஜூன்20

கட்டுத்துவக்கு வெடித்துக் குடும்பஸ்தரின் இடதுகால் சிதறியது.

இச்சம்பவம் நுணாவில் மேற்கில் கடந்த வெள்ளியன்று இரவு 10 மணியளவில் இடம்பெற்றது.

இயற்கைக் கடன்கழிக்கச் சென்றவேளையில் அங்கு பன்றிக்கு வைக்கப்பட்டிருந்த கட்டுததுவக்கு வெடித்து கால் பகுதியில் பலத்தகாயம ஏற்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் குணராசா (வயது-41) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

கடந்த வருடமும் இப்பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்து ஒருவர் காலை இழந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

## அரையாண்டுப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஜூன்20

உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் பட்டப்பின் கல்விடிப்ளோமா கற்கைநெறியின் முதல் வருடத்திற்குரிய முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இதனைத் தொடர்ந்து இரண்டாம் வருடத்திற்குரிய முதல் அரையாண்டுப் பரீடசைகளும் அத்துடன் முழுநேரக் கற்கைநெறிக்கான பரீட்சைகளும் நடைபெறும்.

பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களில் யாழ். பல்கலைக்கழகத்தல் கற்கைநெறிகளை மேற்கொண்டுவருபவர்கள் தங்களுக்கான பரீட்சை அனுமதி அட்டை, பரீட்சை நேர அட்டவணை ஆகியவற்றை பீடாதிபதி அலுவலகம் உயர் பட்டப்படிப்புகள் பீடத்திலும் வவுனியா வளாகத்தில் கற்கைநெறியை மேற்கொள்ளும் இரண்டாம் வருட மாணவர்கள் வவுனியா வளாகத்திலுள்ள வியாபாரக் கற்கைநெறிகள் பீடாதிபதி அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம் என்று உயர் பட்டப் படிப்புகள் பதில் பீடாதிபதி அறிவித்துள்ளார். (எ-203)

## வசதிகுறைந்த மாணவருக்கு பாடசாலை உபகரணம்

வலி.மேற்கு,ஜூன்20

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் வசதிகுறைந்த பாடசாலை மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளைப் பிரதேச செயலர் சீ.எ.மோகன்தாஸ் மேற்கொண்டுள்ளார்.

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் புகைத்தல் எதிர்ப்பு தினத்தையொட்டி கொடி விற்பனை மூலம் சேகரிக்கப்பட்ட சுமார் 80 ஆயிரம் ரூபாவினை இதற்குச் செலவுசெய்வதற்குப் பிரதேச செயலர் திட்டமிட்டுள்ளார்.

கிராம அலுவலாகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோர்கள் மூலம் பாடசாலை உபகரணங்களைக் கொளவனவு செய்யமுடியாத வசதியற்ற பாடசாலை மாணவர்களின் விவரங்கள் தற்போது திரட்டப்படுகின்றன. (எ-175)

## 2 ஆவது பிறந்ததின வாழ்த்து




**திரு.திருமதி சுரேந்திரன் சுகுணா** அவர்களின் செல்வப்புதல்வன் சாதுர்ஜன் தனது முதுலாவது பிறந்ததினத்தை இன்று (20.06.05) திங்கட்கிழமை பி.ப.4.00 மணிக்கு தனது இல்லத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தாமார்களான தெய்வநாதன், மார்க்கண்டு, முருகன், அம்மம்மாமாரான தவமலர், பூரணம்,பூமணி பரமேஸ்வரி, அப்பம்மா கனகமணி, அக்காமார்களான துர்க்கா,கீர்த்தனா, தாட்சாயினி, சாத்வீகா, சாமந்தி, அண்ணாமார்களான நிதர்சனன், அபிராந், மாமாமார்களான சுகுமார், பிறேம்குமார், இந்துகான் சுசீந்திரன், சுதந்திரன், சுரேந்திரன், பெரியப்பா ஜெயரத்தினம், பெரியம்மா சுமதி, சித்தா இராஜேஸ்கண்ணன், அன்ராமார்களான துளசி, சுனிதா, சுசீதா, மாமிமார்களான குமாரி, உமா, ஜெரின் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

**ஞா.தெய்வநாதன்**
**(தாத்தா)**

*இமையாணன் கிழக்கு,*
*உடுப்பிட்டி.*

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 688 |
| திகதி | 17-6-2005 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு

செல்லுபடியாகும் தொடர் இல. 5489973-550356

லக்கினம் கன்னி

வெற்றி இலக்கங்கள்
09 15 43 53

ஜக்பொட் பரிசு ரூபா.17,70,300/- வெல்லப்பட்டுள்ளது
இந்த செவ்வாய்க்கிழமை ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,39,736 | 10/- | 33,97,360/- |
| 2.இலக்கங்கள் | 31,198 | 20/- | 6,23,960/- |
| 1.இல லக்கினம் | 30,917 | 30/- | 9,27,510/- |
| 2.இல லக்கினம் | 2,848 | 100/- | 2,84,800/- |
| 3.இலக்கங்கள் | 835 | 500/- | 4,17,500/- |
| 3.இல லக்கினம் | 77 | 5,000/- | 3,85,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | 01 | 17,70,300/- | 17,70,300/- |
| மொத்தம் | 4,05,621 | - | 92,58,680/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 92,58,680/- தொடர் இல. 4552264 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 மே 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 செனற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5493418-4-03
5500244-8-16
5497688-2-41
5502769-1-03
5493175-2-54

# மரண அறிவித்தல்

## நீக்கிலாப்பிள்ளை இராசேந்திரம்



உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த நீக்கிலாப்பிள்ளை இராசேந்திரம் அவர்கள் நேற்று (19.06.2005) ஞாயிற்றுக்கிமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசேஸ்வரியின் அன்புக் கணவரும் கொர்னேலியஸ் (Holcim, Puttlam), லீலாமலர், சசிகலா (பிரான்ஸ்), வனிதா (பிரான்ஸ்), அருட்திரு ஸ்ரலின் (பங்குத தந்தை- பாஷையூர், பகுதிநேர விரிவுரையாளர்- யாழ். பல்கலைக்கழகம்), றொபின்சன் (ஆசிரியர், யா/நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை, விஞ்ஞானபீடம் முதலாம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழகம்), றோசலின் (ஜேர்மனி), ஜோர்ஜ்குருஷேவ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அல்வீனம்மா, எமிலியானுஸ்பிள்ளை (பிரான்ஸ்), சொலமன் (பிரான்ஸ்), ஜெயந்தினி, ஏரோதுராசா (ஜேர்மனி), மொனிக்கா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இரங்கற் திருப்பலி இன்று (20.06.2005) திங்கள் மாலை 3.30 மணிக்கு உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் ஒப்புக்கொடுககப்பட்ட பின் நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அருட்தந்தையர், அருட்சகோதரிகள், நண்பர்கள் அனைவரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் கிழக்கு,*
*(இந்துக் கல்லூரி முன் ஒழுங்கை)*
*உரும்பிராய்.* (36745) (39-45-17)

தகவல்:
**அருட்திரு இ.ஸ்ரலின்** *(மகன்)*

# தமிழ்த்தேசியத்தின் குரல் நிகழ்வுக் காட்சிகள்



தேசியக் கொடியேற்றும் முன்னாள் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர்.




பொதுச்சுடரேற்றும் துணைவேந்தர்...



அகவணக்கத்தின் போது...






பிரகடனத்தில் கையொப்பம் இடும் போது...



எழுச்சிப் பாடல்கள் இசைத்தபோது...



கைகளை உயர்த்தி உரிமைக்கோஷம் முழங்கியபோது...



நிகழ்வில் கலந்துகொண்டோர்

படங்கள்:பிரபா



தமிழ்த்தேசியத்தின் குரலை வெளிப்படுத்தியவர்கள்....











# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

**Love Birds** விற்பனைக்குண்டு. விலை 300/=. இஜிப்ஷன், ஜக்கோப்பியன் ஜேர்மன் அவுல், றேஸிங் கோமர், பான்ரெல், பிளக் பேதர் போன்ற பல வகையான புறாக்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: K.ரட்ணம், இல. 01, மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி. **T.P.:** 0777 779975, 021 226 3104. (36707)

## வீடு வாடகைக்கு

வோல்ட்டன் இடம், தும்பளை - பருத்தித்துறையில் விசாலமான காணியில் அமைந்துள்ள வீடு வாடகைக்குண்டு (அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது). தொடர்புகளுக்கு: **T.P.:** 0773107578. மின் அஞ்சல்: **jab-srilanka@hotmail.com** (36703)

## தவறிவிட்டது

அரியாலை கிழக்கு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியையுடைய தியாகராசா நாகேஸ்வரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (631415270V) கைதடிக்கும் இணுவிலுக்கும் இடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும் (சன்மானம் வழங்கப்படும்) தி.நாகேஸ்வரன் பெரியசீமா தூர்க்காபுரம் தெல்லிப்பழை. (36733)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட **Original Prima Broiler** குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 20.06.2005 திங்கட்கிழமை பிற்பகல் தொடக்கம் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம்- தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம், திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர் ஆகிய இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். (36569)

தரமான நம்பர்-1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 22-06-2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ் - ஆனைக்கோட்டைச் சந்தி, P.ரவி - சாவகச்சேரி, றாதா - மாவடி, வட்டுக்கோட்டை, ஸ்ரீராம் - பருத்தித்துறை, பஸ்நிலையம் முன்பாக, றஞ்சித் - 517, ஸ்ரான்லி வீதி, கௌரி ஸ்ரோர்ஸ், பண்டத்தரிப்பு, தாரகை - முதலாம் கட்டை, பருத்தித்துறை. **T.P.:** 222 3529 (36711)

## திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு இந்து, கிறிஸ்தவ அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் மணமக்களின் ஜாதகங்கள் உண்டு. தொடர்பு: இல.72, கல்யாண வேலன் சர்வதேச திருமண சேவை, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (36735)

## நாற்றுக்கள் விற்பனைக்கு

**தரமான ராம்புரம் ரக பம்பாய் வெங்காய நாற்றுகள் விற்பனைக்குண்டு.**

**தொடர்பு: செல்லப்பா குமாரசாமி**
*(கோழிப்பண்ணை வளவு)*
*அராலி மத்தி (கொட்டைக்காடு வைத்திய சாலைக்கு அருகில்) அராலி.*
(36740) (21-16-18)

## தேவை

275, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும் **பிறைற் ஒக்ஷன் சென்ரர், பிறைற் கொமினிக்கேசன் சென்ரர்** என்னும் ஸ்தாபனத்திற்கு உடன் அனுபவமுள்ள ஆண், பெண் வேலையாள்கள் தேவை. நேரில் வந்தால் ஊதியம் பற்றித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 275, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
T.P. 222 2426, 3404
(21-18-16) (35737)

## தவறிவிட்டது

10 பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலி ஒன்று 18.06.2005 சனிக்கிழமை யாழ்.பண்ணை வீதிக்கும் புளியங்கூடல் மகமாரி அம்மன் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.(தகுந்த சன்மானம் வழங்கப்படும்).

**செல்வா ஸ்ரோர்ஸ்**
2A. நவீன சந்தை. யாழ்ப்பாணம
T.P.: 222 7335
(36736) (21-18-16)

## வீடு வாடகைக்கு

சுதுமலையில் (மானிப்பாய், கொக்குவிலுக்கிடையில்) மேல்மாடியுடனான புதிய வீடு NGO அல்லது கௌரவமான குடும்பத்தினருக்கு உடனடியாக வாடகைக்குண்டு.
T.P.: 077 - 6964678
(35737) (21-18-16)

## கல்விப் பணிப்பாளர் ஓய்வு

தீவக வலயக் கல்விப் பணிப்பாளராக பணிபுரிந்த எஸ்.மகேந்திரன் சுயவிருப்பத்தின்படி இம்மாதம் 11ஆம் திகதி தொடக்கம் இளைப்பாறியுள்ளார். இவர் திருகோணமலையில் இயங்கும் வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சின் அபிவிருத்திப் பிரிவில ஒப்பந்த அடிப்படையில பதவி ஒன்றுக்கு நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. தீவக வலயக் கல்விப் பணிப்பாளராக யாழ். மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தற்போது பதில் கடமையாற்றி வருகிறார். (எ-51)

## அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின் வாகனத்தரிப்பு பாதுகாப்புக் கட்டணம் அறவிடல்

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின் வாகனத்தரிப்பு பாதுகாப்புக் கட்டணம் அறவிடல் தொடர்பான கடமையை பொறுப்பேற்க விரும்பும் ஸ்தாபனம் அல்லது தனியார் மாதாந்தம் அபிவிருத்திச் சபைக்கு செலுத்தக் கூடிய தொகையைக் குறிப்பிட்டு 28-06-2005 செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்கவும் விண்ணப்பங்கள் 29ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு பரிசீலனை செய்யப்படும்.

தொடர்புகள்:
செயலாளர்,
**அரசினர் வைத்தியசாலை,அபிவிருத்திச்சபை,**
**அச்சுவேலி.**
(46-21-18-16)
(c/43552)

# கண்ணீர் அஞ்சலி

## டாக்டர் மயில்வாகனம் இராசையா



அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் நிறைவான சேவையாற்றிய பெருந்தியாக டாக்டர் **மயில்வாகனம் இராசையா** 12.06.2005இல் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அவரது பிரிவால் துயர் உற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுவதோடு அன்னாரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
**வைத்திய அதிகாரி, ஊழியர்கள்**
**வைத்தியசாலை அபிவிருத்திச் சபை, அரசினர் வைத்தியசாலை**
**அச்சுவேலி.**
(ச-43553) (39-21-18-16)

# 2005 A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான கணனிப் பயிற்சி நெறிகள்

**அனைத்துப் பயிற்சி நெறிகளிற்கும் 50% கட்டணச் சலுகை**

**DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE 2003** — Duration 5 Months — Course Fees Rs. 875/=
- Fundamentals of Information Technology
- Word
- Excel
- MS Money
- Access
- Power Point
- Internet, E-mail

**DIPLOMA IN DESKTOP PUBLISHING** — Duration 4 Months — Course Fees Rs. 1375/=
- word
- Power Point
- Pagemaker
- Corel Draw
- Photoshop

**DIPLOMA IN COMPUTER PROGRAMMING** — Duration 8 Months — Course Fees Rs. 2800/=
- Information Technology
- SAD
- Visual C++ (System, Bios, Memory, Disk, Network Programming)
- Visual Basic
- Protocol Builds-up
- Visual FoxPro
- Oracle
- Java
- Internet, Interfacing Programming.

**DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING** — Duration 4-5 Months — Course Fees Rs. 1800/=

Electronics fundamentals, digital Electronics fundamentals, DE to IT formulation, DE in Hardware computer function and components component level servicing, trouble shooting and fixing, various troubles and shooting Board level trouble shoot and servicing various casingtypes, Mother board types and SMPS types. Various OS types, OS preparation and installations, Hard disk portioning & file systems, Windows 98 and Windows XP variety installations DOS internal and external command. Software and Antivirus installations preparation of Rescue disk, How to Rescue an affected system regular most problems and Trouble shoots various Bios and setup turned-up modem configuration, Internet setup, Email setup & configuration

**DIPLOMA IN NETWORK ENGINEERING** — Duration 4 Months — Course Fees Rs. 2850/=

**DIPLOMA IN VISUAL BASIC** — Duration 4 Months
**DIPLOMA IN COMPUTER SCIENCE** — Duration 6 Months
**DIPLOMA IN AUTOCAD** — Duration 4 Months
**DIPLOMA IN $C^{++}$** — Duration 4 Months
Course Fees Rs. 1375/=

பயிற்சிகள் ஆரம்பம் 02,06.07.2005

இச்சலுகை July 15 மட்டுமே!

உங்கள் பதிவுகளை இன்றே முன்பதிவு செய்து கொள்ளுங்கள்

மேலுள்ள பயிற்சி நெறிகளில் ஒன்றைத் தொடரும் மாணவர்கள் கீழுள்ள பயிற்சி நெறியை இலவசமாக கற்றுக் கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்

**DIPLOMA IN INTERNET E-MAIL** — Duration 2 Months

**Softview Computer College**
www.scclanka.com
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
scclanka@hotmail.com
T.P: 021 2225170,
0777846811

ஓம் ஸ்ரீ ராம ஜெயம்

## யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## அர்ச்சகர் பதவி வெற்றிடம்

யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் ஸ்ரீ ஆஞ்சநேயர் கோயிலுக்கு முழுநேர அர்ச்சகர் ஒருவர் தேவை.

ஆற்றல், அனுபவத்தின் அடிப்படையில் தேவஸ்தானத்தில் 'C' சம்பளத் திட்டத்தின்படி பொருத்தமான படியில் சம்பளம் வழ்ங்கப்படும்.

4500/- - 9125/-

125/= x 5, 150/= x 5, 200/= x 10, 250/= x 5

* இதர படிகள் பேசித் தீர்மானிக்கப்படும்.

சுய விவரத்துடன் *செயலாளர், யாழ். வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் ஆதீன மகாசபை, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.

**முடிவு திகதி 15.07.2005**

(சி/43549) (21-16-18)

**தலைவர்,**
**யாழ்.வண்ணை ஸ்ரீ வே.வ.பெருமாள் கோயில்**
**ஆதீன மகாசபை யாழ்ப்பாணம்**

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 - 02 - 1954 | 30 - 06 - 2004 |

## அமரர் கலாநிதி மகாதேவா ஸ்கந்தராஜா

(M.Sc., Ph.d Alberta)

**ஓராண்டு கழிந்ததோ ஒன்றும் தெரிந்திலோம்**
**பாராளும் மன்னன் போல் பார்போற்றவாழ்ந்தவனே**
**யாராலும் மறக்க வெண்ணா மன்னா உன்னைத்**
**தேறாத உளத்தால் நினைந்திடுவோமுள்ளவரை**

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
(36742) (46-16-18-21)

பிரிவால் துயருறும்
\- குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## எலிசம்பிள்ளை மனோன்மணி



இல.57,பழைய பூங்கா வீதியைச் சேர்ந்த எலிசம்பிள்ளை மனோன்மணி (18-06-2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற எலிசம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குணரத்தினம், றஞ்சினி, றெஜினா, ராணி, திலகரட்ணம், பிறேமா ஆகியோரின் பாசமிகு தாயும் ஜெயா, பொன்ராஜா சாள்ஸ் மத்தியூஸ், அன்ரன், வதனி, கண்ணதாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சாள்ஸ் மத்தியூஸ் (மருமகன்)
சுங்கத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்

T.P No: 4590968,
0777163050
(36739) (46-16-18-21)

## கார்த்திகேசு ஆறுமுகம்



சரவணையைப் பிறப்பிடமாகவும் வேலணையை வசிப்பிடமாகவும் கொண்டவரும் பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு ஆறுமுகம் நேற்று (19.06.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு- செல்லமுத்துவின் அன்பு மகனும் பரிமளத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அருணாசலம், சுப்பிரமணியம், செல்லாச்சி, சின்னத்தங்கம், அன்னம், மற்றும் பசுபதிப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரனும், நாகேஸ்வரி (நோர்வே), ஆனந்தன் (வேலணை), நாகலெட்சுமி (பிரான்ஸ்), யோகேஸ்வரன் (நல்லூர்), யோகலெட்சுமி (பாண்டியன்தாழ்வு), காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் யோகராசன் (நாகபடுவான்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பாலசுப்ரமணியம், வடிவாம்பிகை, அமிர்தா, சண்முகநாதன், பாலசுப்ரமணியம், மதி, யோகராணி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2005) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் (பாண்டியன்தாழ்வு) நடைபெற்றுப் பூதவுடல், பிற்பகல் 4 மணியளவில் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**24, சந்தனமாதா லேன்,**
**பாண்டியன் தாழ்வு,**
**சுண்டுக்குளி.**
(36746) (16-18-21)

தகவல்:
**மனைவி,**
**பிள்ளைகள்.**

# எங்களை அடக்க...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனதிலே கொண்டு செயற்படுவது மிகவும் வேதனைக்குரிய விடயம்.

இந்த நாட்டிலே அனைத்து மதங்களுக்கும் சுதந்திரம் உண்டு. தனித்துவம் உண்டு. பௌத்தமதம் மட்டும்தான் மக்களை ஆளுவதாக இல்லை. ஏனைய மதத்தவர்களும் இந்த மண்ணிலே இருக்கிறார்கள் என்பதை அவர்களுக்கு சொல்லவேண்டிய காலம் வந்துவிட்டது.

பௌத்த குருமார்கள் அரசியலில் ஈடுபடுவது பொருத்த மற்ற விடயம். ஆன்மீகத்தோடு இருக்கிற குருமார்களுக்கு அரசியல் தேவைதான். அதுவும் ஓரளவு இருக்கலாம்.

ஆனால், அங்குள்ள பௌத்த குருமார்கள் தமது எண்ணங்களை தேவை இல்லாத விடயங்களுக்கு செயல் வடிவம் கொடுப்பது, அந்த மதத்திற்கு செய்கின்ற துரோகம் என்று தான் நாங்கள் நினைககின்றோம்.

இந்த பௌத்த குருமார்களுக்கு, வடபகுதியில் இருக்கின்ற அனைத்து தமிழர்களினதும் குரலாக சொல்லவிரும்புவது என்னவென்றால், "இந்த இனத்தை மீண்டும்மீண்டும் ஒடுக்க வேண்டாம் எங்களை வாழவிடுங்கள். எங்களுக்குரிய சுதந்திரத் தைத் தாருங்கள். நாங்கள் வாழ்வதற்காகவே இந்த மண்ணில் இருக்கிறோம்" என்பதே இதனை எமது தேசியத்தின குரலாக வெளிப்படுத்துகின்றேன்.

அனைவரும் ஒன்றிணைவோம். ஒன்றுபட்டு வாழ்வோம். இந்த மண்ணின் விடுதலைக்காகவும் மக்களுடைய சுதந்திரத்திற்கா கவும் நாங்கள் குரல் கொடுத்து வாழ்வோம்.

---

# தமிழர் உரிமைப் பிரச்சினைக்கு...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தன.

1984ஆம் ஆண்டு சர்வதேச நீதியரசர்களின் ஆணைக்குழு சார்பாக இலங்கை நிலைபரத்தைப் பற்றித் தாம் தயாரித்த அறிக்கையில் போல் சீகாட் என்பவர் இலங்கையின் இனக்கலவரங்கள் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'இந்த இனக்கலவரங்களுக்கிடையேயான கால இடைவேளை படிப்படியாகக் குறுகிக் கொண்டுவந்துள்ளது. நாட்டில் மேலும் மேலும் பரவலாக அவை இடம்பெறுகின்றன. அவற்றின் கனாகனமும் அதிகரித்துக்கொண்டே வந்துள்ளது. தமிழர் கொல்லப்படுவது, அங்கவீனராக்கப்படுவது, கொள்ளையடிக்கப்படுவது, வீடில்லாமல் ஆக்கப்படுவது போன்ற இனக்கலவரங்களெல்லாம், தொடர்பற்ற தனித்தனிச் சம்பவங்களல்ல அவை ஒரு நாசகாரமான வாடிக்கையாக மாறத் தொடங்கியுள்ளன .... இந்த இனக்கலவர சம்பவங்களில் தெளிவாகக் காணப்படும் குணாதிசயங்களில் ஒன்று என்ன வென்றால் தமிழ்மக்கள் தங்கள் மத்தியிலிருந்த சிங்களமக்கள் மீது பழிவாங்கவில்லை என்பதாகும். இதனால் ஒவ்வொரு கலவரத்திலும் பலியானவர்கள் எல்லாம் தமிழ்மக்களே.'

- இவ்வாறு படிப்படியாக உரிமைகள் மறுக்கப்பட, தமிழ்மக்களின் இலக்கு சமஉரிமை என்ற நிலைப்பாட்டிலிருந்து "தனித்தமிழீழம்" என்ற நிலைப்பாட்டிற்கு மாறியது. அதேவேளை அஹிம்சை வழிக்குக் கிடைத்த பதில் வன்முறையும் ஒடுக்குமுறையுமாய் இருந்ததால் இலக்கை அடையும் வழி சாத்வீகப் போராட்டத்திலிருந்து ஆயுதப் போராட்டமாக மாறியது இம்மாற்றங்களுக்கு அடிப்படைக் காரணமாயிருந்தது. சிங்கள - பௌத்த பேரினவாதமே.

### ஆயுதப் போராட்டம்

அஹிம்சை வழியில் நம்பிக்கையிழந்து ஆயுதப்போராட்டமே அடுத்தவழி என்ற கருத்து வளரத்தொடங்கியது. 1978ஆம் ஆண்டில் "தமிழீழ விடுதலைப் புலிகள்" என்ற ஆயுதம் தாங்கிய அமைப்பு தமிழ் இளைஞர் மத்தியில் உருவாகியது. சிறிய கெரில்லாப் படையாக ஆரம்பித்த இந்த அமைப்பு காலப்போக்கில் பலம் வாய்ந்த மரபுவழி இராணுவமாக வளர்ச்சி பெற்றது.

### பாதுகாப்புப் படையினரின் பங்கு

பேரினவாத அரசியற் தலைமைத்துவம் தமிழ்மக்களின் உரிமைப்போராட்டத்தை நசுக்குவதற்கு இராணுவத்தைப் பயன்படுத்தியது. ஆரம்பத்தில் வெறும் சோடினையாயிருந்த இராணுவம், காலப்போக்கில் சர்வதேச அரங்கில் தான் இழந்துபோன நற்பெயரை மீளப்பெறுவதற்கு பெரும்பாடுபடவேண்டியிருந்தது. அவ்வளவு மோசமான அட்டூழியங்கள் இடம்பெற்றன. கற்பழிப்பு, சித்திரவதை, எதேச்சையான கைதுகள், சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், கைதுசெய்யப்பட்ட பின் "காணாமற்போதல்" போன்ற பல மனிதஉரிமை மீறல்களுக்குப் பொறுப்பாயிருந்தனர். இச்செயல்களாலும் கணமூடித்தனமான குண்டு வீச்சுக்களாலும் 65 ஆயிரத்திற்கு மேற்பட்ட அப்பாவிமக்கள் கொல்லப்பட்டனர். சேதமடையாத கட்டடங்களேயில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் கவசமாகக் கொண்டு "சர்வதேச மனிதஉரிமைகள் மசோதாவில்" பொறிக்கப்பட்டுள்ள சகல உரிமைகளும் மீறப்பட்டன.

### திம்புப் பேச்சுவார்த்தைகள் - 1985

போரைக் கைவிடுவதற்கென இந்தியாவின் அனுசரணையுடன் இப்பேச்சுக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன. இதில் கலந்து கொண்ட சகல தமிழ்க்குழுக்களும் தமிழ்மக்கள் ஒரு தனித்துவம்கொண்ட தேசிய இனம். அவர்களுடைய தாயகமும் அதனுடைய பௌதிக ஒருமையும், சுயநிர்ணய உரிமை ஆகியவை அங்கீகரிக்கப்படுதல் ஆகிய அடிப்படைக் கோட்பாடுகளை முன்வைத்தனர். இலங்கை அரசோ இவற்றை நிராகரித்தது. இதையடுத்துமொரு போர் தீவிரமடைந்து. நீடித்தது.

### போர்நிறுத்த ஒப்பந்தம் - 2002

இராணுவ ரீதியில் பலமான இடத்தில் நின்றபோதும் தமிழீழ விடுலைப் புலிகள் இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்த முன்வநதனர். ஆனால் தென்பகுதி சுயநல அரசியற் போட்டிக் கலாசாரம் இதை மழுங்கடித்துள்ளது. தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை முன்னேறுவதாக இல்லை. தொடர்ந்து நிலைநிற்கும் இராணுவ உயர்பாதுகாப்பு வலயங்களும் இதற்காண காரணங்களில் ஒன்றாகும். விவசாய நிலங்கள், மீன்பிடித்தொழில், பாடசாலைகள் போன்ற பல விடயங்களில் இயல்பு நிலை முழுமையாகத் திரும்பவில்லை.

### இன்று

இன்றைய நிலையில், சுனாமிப் பேரலையின அழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு - சர்வதேச சமூகத்தின் மனத்தையே உருகவைத்த இந்த இயற்கைப் பேரழிவினால் பாதிக்கப்பட்டு வாடிநிற்கும் மக்களுக்கு உதவுவதற்கு - ஒரு சிறியளவிலான கட்டமைப்பை அமைப்பதற்கு - அதுவும் கூட்டாக அமைப்பதற்கு இதுவரை இயலாத நிலைமை! 50 ஆண்டுகளுக்கு மேலாக மனிதாபிமானத்தை அவ்வளவுக்கு வரட்டிவிட்டது பேரினவாதம்.

### நிறைவாக

இப்பேரினவாதம் தமிழ்மக்களின் உரிமைப் பிரச்சினைக்கு நியாயமான வழிகளைக் கையாளவிடும் என்று இனிமேல் எள்ளளவேனும் எதிர்பார்க்க முடியாது. இந் நிலையில் தமது நிலத்தைத் தமது பலத்தில் தாமே பாதுகாத்து தமது சுயத்தை தாமே நிர்ணயிப்பதென தமிழ்மக்கள் கொண்டுள்ள உறுதியை இந்த அரங்கில் பிரகடனப்படுத்துகின்றனர்.

---

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 . 01 . 1940



மறைவு 10 . 07 . 1995

**அமரர் மார்க்கண்டு யோகநாதன் (சின்னையா)**

திதி: 20.06.2005 திரயோதசி

கருத்துடனே சேய்கள் எமைக்
கடின உழைப் பால் காத்தீர்!
உருத்தெரியா தோர்நொடியில்
உயிர்பறிக்கப் பட்டதுயர்
வருத்துகின்ற துளம்மை எம்
மாதாவை! எனினும்நீர்
இருக்கின்றீர் வழித்துணையாய்
எம்முயிருள் உயிராக!
அதனால் எம் அப்பா,
ஆர்வமிகும் முயற்சியினால்
சிதையாமல் எம்குடும்பம்
சிரம் நிமிர்ந்து நிற்கிறது!
மண்ணுக்குள் போனாலும்
மரத்துக்கு உயிர்வேரே!
மண்ணுக்குள் போயும் எம்
வாழ்வுக்கும் உயிர்நீரே!
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

*பழைய பால்சங்க ஒழுங்கை,*
*இணுவில் மேற்கு,*
*சுன்னாகம்.*
(36746) (25-11-13) -குடும்பத்தினர்.


ராஜா யாழ்ப்பாணம்
ரஜனிகாந்த், பிரபு, ஜோதிகா,
நயன்தாரா, வடிவேல் நடித்த
சந்திரமுகி
(ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
சரத்குமார், அறிமுகம் ரமேஸ், பூஜா நடித்த
ஜித்தன்
(ரீல்ஸ்)
காட்சிகள்:
11.00, 3.00 (பு.நே.)
22 முதல் கற்க கசடற

நாதன்ஸ் சினிமா
"இன்டி பென்டன்ஸ் டே" டைரக்டர்
ரோலண்ட் எம்ரீச் மீண்டும்
முத்திரை பதிக்கும் படைப்பில்!
கா.நே.: 10.30,2.30, 6.30,9.30. (பு.நே.)
THE DAY AFTER TOMORROW
நாளை மறுநாள் (தமிழாக்கம்)
சுனாமி போன்ற அழிவுகளைச் சித்திரிக்கும்.
பாடசாலை ஊடாக வரும் மாணவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்.


---

## நாம் மொழி...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினைகளும் இல்லை. எங்களுக் ங்களுடைய கடந்தகால நிலைமைகளை மறந்து நாங்களும் த நிமிர்ந்து வாழவேண்டும் என்பதற்காக இந்த விடுதலைப் புலிகள் உ நாடாளுமன்றப் பிரதிநிதிகள் யாவரும் இன்றும் குரல் கொடுதது ருகிறார்கள்.

நாங்கள் ஒரு மொழி பேசக்கூடிய மக ர்கள், நாங்கள் யாவரும் மதத்தால் பிரிக்கப்பட்டிருப்பினும் மொழியால் ஒன்றுபட்டவர்களே.

பௌத்த பேரினவாதத்தைக் கேட்டுக்கொள்வது நாம் என்ன வென்றால் தமிழ்பேசும் மககளை நீங்கள் அடக்க முனைய வேண்டாம். எங்களுடைய உணர்வுகளை மதித்து உரிமைகளுக் காகச் செயற்படுங்கள் - என்று தான்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னம்மா துரைசிங்கம்



உசனைப் பிறப்பிடமாகவும் எழுதுமட்டுவாளை நிரந்தர வசிப்பிடமாகவும், பருத்தித்துறையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா துரைசிங்கம் நேற்று (19.06.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நடராசலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்), சிவயோகலிங்கம் (அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம், யாழ்ப்பாணம்), சுபந்திராதேவி, சித்திவினாயகலிங்கம் (பொறியியலாளர், அபுதாபி), கெங்காதேவி, திருக்குமரலிங்கம் (சுங்கத்திணைக்களம், கொழும்பு), கிருஷ்ணாநந்தலிங்கம் (உதவித் தேர்தல் ஆணையாளர், மட்டக்களப்பு), அருட்சோதிலிங்கம் (கனடா), நவமணிதேவி (உப அஞ்சல் அதிபர், எழுதுமட்டுவாழ்) ஆகியோரின் அருமைத் தாயாரும் லோகநாயகி, பரமேஸ்வரி காலஞ்சென்ற அசோக்குமார் மற்றும் ராகினி, தங்கராசா (இலங்கை வங்கி, சாவகச்சேரி), இராசகுமாரி, இரஞ்சினிதேவி, சுமதி - சிவானந்தம் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரதான வீதி,*
*மருதடி, பருத்தித்துறை.*
(36753) (25-11-13)
தகவல்: து.நடராசலிங்கம (மகன்)

### திருமதி இராஜேஸ்வரி சந்திரபாலன்



பொன்னாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் பறாளாய் வீதி, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி சந்திரபாலன் நேற்று (19.06.2005) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் அமரர்கள் திரு.திருமதி அ.கோவிந்தப்பிள்ளையின் சிரேஷ்ட புத்திரியும், அமரர்கள் திரு.திருமதி மு.கார்த்திகேசுவின் மருமகளும், கா.சந்திரபாலன் (பிரதிக் கல்விப்பணிப்பாளர், திட்டமிடல், வலிகாமம் கல்விவலயம்) அவர்களின் அன்பு மனைவியும் கோ.இராமச்சந்திரன் (ஓய்வுபெற்ற இ.போ.ச.உத்தியோகத்தர்) திருமதி சிவனேஸ்வரி சிவசுப்பிரமணியம், திருமதி யோகேஸ்வரி திருஞானசம்பந்தன் (ப.நோ.கூ.சங்கம், சங்கானை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் திருமதி சந்திரபூபதி கணபதிப்பிள்ளை, அமரர்கள் கா.சந்திரராசா, கா.சந்திரவரதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ச.சுகந்தன் (நியாப் திட்டம்), திருமதி சுதர்சினி ரூபராஜ் (பிரதேச சபை வலி.வடக்கு), செல்வி ச.சுபோதினி (யாழ். பல்கலைக்கழகம், விஞ்ஞானபீடம், 3ஆம் வருடம்), செல்வி ச.சுகன்யா (A/L 2005, வர்த்தகப் பிரிவு, யாழ்.சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சு.கணபதிப்பிள்ளை (சங்கீதபூசணம்), திருமதி ச.சகலகலாவல்லி (ஓய்வுபெற்ற ஆசிரியை), திருமதி ச.செல்வரட்ணம் (ஆசிரியை, இராமநாதன் கல்லூரி, பம்பலப்பிட்டி) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் ஆ.ரூபராஜின் (கட்டார்) அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பறாளாய் வீதி,*
*சுழிபுரம்.*
(C-43562) (25-11-13)
தகவல்: கா.சந்திரபாலன் (கணவன்)

### திருமதி துரைரத்தினம் செல்வரத்தினம

**(அராலி நாகபூஷணி அம்மை தேவஸ்தான தர்மகர்த்தா)**

திருமதி துரைரத்தினம் செல்வரத்தினம் அவர்கள் 18.06.2005 சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அ.துரைரத்தினம் (தலைமை ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி) அவர்களின் அன்புப் பாரியாரும், காலஞ்சென்ற செல்லத்துரை (HEAD OVERSEER, P.W.D., MALA-YA) - இராசம்மாவின் மகளும் அப்புலிங்கம் (பொறியியலாளா, U.S.A.), Dr.கதிர்காமகார்த்திகேயன் (கண் சத்திரசிகிச்சை நிபுணர், U.K.), சிவசக்திவேல் (பட்டயக் கணக்காளர், நியூசிலாந்து), பதஞ்சலி (முகாமைத்துவக் கணக்காளர், U.K.), நாகராஜேஸ்வரி (சட்டத்தரணி, கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரகலா, வரலஷ்மி, DR.மலர் இராணி, சிவபாதம் (சட்டத்தரணி), சாந்தினி ஆகியோரின் மாமியாரும், ஆதிரையன், அபிராமி, துரைரத்தினம், சங்கரி, சிவநேசன், நாராயணி, பயிரவி, நிமலன், மாதங்கி, மாலினி, நிருந்தன் ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் குறோயிடன், U.K. இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*30/3A சில்வஸ்ரர் வீதி,*
*கல்கிசை.*
(36751) (25-11-13)
தகவல்: திருமதி நா.சிவபாதம்.

### றீற்ரா - யோகராணி



ஏழாலை தெற்கு, சூராவத்தையைப் பிறப்பிடமாகக்கொண்ட றீற்ரா யோகராணி 15.06.2005 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரை- சின்னம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் (தபால் ஊழியர்) அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (21.06.2005) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு சூராவத்தை புனித திரேசாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் ஏழாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை தெற்கு,*
*சூராவத்தை, சுன்னாகம்.*
(36754) (25-11-13)
தகவல்: பிள்ளைகள், மருமக்கள்

# மின்சாரசபை மறுசீரமைப்பு இனித் துரிதமாக நடக்கும்

கொழும்பு,ஜுன்20

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன பங்கு விற்பனை மற்றும் இலங்கை மினசார சபை மறுசீரமைப்பு தொடர்பிலான செயற்பாடு களைத் துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவைப் பணித்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.

இதன்படி எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தின்போது இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரங்களை அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த முன்வைப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரைகாலம் அரசாங்கத்தில் அங்கம் வகித்த ஜே.வி.பி. தெரிவித்துவந்த எதிர்ப்பின் காரணத்தினால் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன பங்கு விற்பனை மற்றும் மின்சாரசபை மறுசீரமைப்பு செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமல் அரசு தடுமாறி வந்தது. இது தொடர்பான திட்டங்களை பல தடவைகள் மீள்பரிசீலனைக்குட்படுத்த வேண்டிய கட்டாயமும் அரசுக்கு ஏற்பட்டது.

ஆனாலும், ஜே.வி.பி.இப்போது அரசாங்கத்தில் அங்கம் வகிக்காத காரணத்தினால், அவர்களின் எதிர்ப்புக் குரலை இப்போது பொருட்படுத்தாமல் இந்தச் செயற்றிட்டங்கள் குறித்து உடனடியாகக் கவனஞ்செலுத்துமாறு ஜனாதிபதி மின்சக்கதி, எரிபொருள்துறை அமைச்சரைப் பணித்திருக்கிறார் என மேலும் தெரிய வருகிறது.

## தமிழ் - முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம, கி.சிவனேசன், மா.க.ஈழவேந்தன் ஆகியோரும்-

முஸ்லிம்கள் சார்பில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் உலமாக்கள் சபைத் தலைவரும் யாழ்.மாவட்ட மக்கள் பணிமனைத் தலைவருமான மௌலி சுபியான், புதுப்பள்ளிவாசல் இமாம்மௌலவி அலாவூதின் மற்றும் பொதுமக்கள் ஆகியோரும் - கலந்துகொண்டனர்.

குடாநாட்டு முஸ்லிம் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக இதில் கலந்துகொண்ட முஸ்லிம் மக்களிடம் அரசியல் துறையினர் கேட்டறிந்தனர்

அங்கு இளம்பரிதி மேலும் தெரிவித்ததாவது:-

சிங்கள பௌத்த பேரினவாதம் தனது மேலாதிக்கத்தை தமிழ்மக்கள் மீதும், இஸ்லாமிய மக்கள்மீதும் திணிக்கிறது. முஸ்லிம் மக்களை இந்தப்பேரினவாதம் பாதிக்கவில்லை என்று கருதுவது தவறானது. சிங்கள சமூகக் கட்டமைப்பானது பௌத்தமதவாத ஐதீக வரலாறுப் பேரினவாத சிந்தனைகளால் உருவாக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த நாட்டை சிங்கள பௌத்த பூமியாக்க அவர்கள் முயற்சிக்கின்றனர்.

இதனாலேயே, தமிழ்-முஸ்லிம் மக்கள் மீது பௌத்த பேரினவாத மேலாதிக்கத்தை திணித்து அடக்கியாள அவர்கள் எத்தணிக்கின்றனர். இந்த அடக்குமுறையிலிருந்து விடுபட தமிழ் - முஸ்லிம மக்கள் முயற்சிக்கின்றனர்.

முஸலிம் மக்களும், தமிழ்மக்களும் மொழியாலும் வாழ்விடமுறையாலும் பின்னிப்பிணைந்த சகோதரத்துவமானவர்கள். அத்தகைய தமிழ் - முஸ்லிம்மக்களின் கௌரவமான, பாதுகாப்பான சுதந்திரமான வாழ்வை உறுதிப்படுத்துவதே தமிழீழ விடுதலைப் புலிகளின் நோக்கமாகும் என்றார் அவர்.

இக்கலந்துரையாடலின் முஸ்லிம் மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு குழுஒன்று அமைத்து அதன்மூலம் தீர்வுகாண்பது என முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.(படங்கள் 2ஆம் பக்கத்தில்) (ஒ-7-ரி)

## தமிழக அகதி முகாம்களில் பொலீஸார் திடீர் சோதனை!

கடந்தகாலப் போர் அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்து தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ள அகதி முகாம்களில் பொலீஸார் நேற்றுமுன்தினம் திடீர் சோதனை நடத்தினர். விடுதலைப் புலி உறுப்பினர்கள் தமிழகத்திற்குள் ஊடுருவியுள்ளனரா என்பதைக் கண்டறியவே இந்தச் சோதனை நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள அகதி முகாம்களில் நேற்றுமுன்தினம் அதிகாலை 4 மணி முதல் மதியம் 1 மணிவரை பொலீஸார் திடீர் சோதனை நடத்தினார்கள். அப்போது முகாமில் பதிவுசெய்து தங்கியிருப்பவர்கள் மற்றும் மேலதிகமாகத் தங்கியிருப்பவர்கள் பற்றி கணக்கெடுக்கப்பட்டது.

இது குறித்து பொலீஸ் உயர் அதிகாரியிடம் கேட்டதற்கு அகதிகள் முகாமில் அவ்வப்போது நடத்தப்படும் வழக்கமான சோதனைதான் இது. புதியவர்கள் யாரும் முகாமில் இருக்கிறார்களா? பதிவு செய்யாமல் தங்கியிருப்பவர்கள் பெயர் பற்றி கண்டறிய சோதனை நடத்தப்பட்டது - என்றார்.

## புளொட் உறுப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் வைத்து இவர்சுட்டுக்கொல்லப்பட்டார் என்றும் பொலீஸார் கூறினர். சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இரவு 8.30மணியளவில் வீதியில் சென்றுகொண்டிருந்த சமயம் இவர் பிஸ்ரல்தாரிகளால சுடப்பட்டுள்ளார். வவுனியா நகரில் இருந்து 4 கிலோமீற்றர் தொலைவில் சம்பவம் நடந்துள்ளது - என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உயிரிழந்த உதயகுமாரசிங்கம் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். இவர் புளொட் அமைப்பின் நீண்டகால உறுப்பினராகவும் இருந்தவர்.

## தாயக மண்ணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம் சமயப் பெரியோர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், கிராம மட்ட அமைப்புகளின் தலைவர்கள் என ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு உரிமைக்கோஷம எழுப்பினர்.

நிகழ்வின ஆரம்பத்தில் தேசியக்கொடியை பலகலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் எஸ்.செல்வக்குமார் ஏற்றினார். பொதுச்சுடரை பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ். மாவட்டச் செயலாளர் சூ.சிறில், வலி.வடக்கு கடற்றொழிலாளர் சங்கச் செயலாளர் எஸ்.இரட்ணராஜா, இந்துகுருமார் ஒன்றியத்தின் பிரதிநிதி சிவஸ்ரீமகாகணபதி ஈஸ்வரக் குருக்கள், வண.பிதா ஜெயக்குமார் அடிகளார், இரண்டாவது லெப்டினன்ட் மாவீரர் சரத்பாபுவின் தாயார் திருமதி கந்தசாமி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

நிகழ்வில் முதலில் நீதிக்கும் சமாதானதக்குமான ஆணைக்குழுவின் செயலாளர் வண. பிதா ஐ.பேர்ணாட் அடிகளார் வரலாற்றை விளக்கும் உரை நிகழ்த்தினார்.

அதன்பின் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள், யாழ் பள்ளிவாசல் மௌலவி சகிஸ் மௌலானா, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் தமிழ்த்தேசியத்தின் அவசியம் குறித்து உரையாற்றினர்.

அதனைத் தொடர்ந்து நடந்த எழுச்சி நிகழ்வில் 'எமதுநிலம் எமக்குவேண்டும்'

'எமது தலைவர் பிரபாகரன்', 'சுயநிர்ணயத்தை நிலைநிறுத்துவோம்' எனக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கோஷம் எழுப்பினர்.

நிகழ்வின் இறுதியில் அங்கு கூடியிருந்த மக்கள் தமது எண்ணக் கிடக்கைகளை உணர்வுபூர்வமாக எடுத்துக்கூறினர். இறுதியாகச் சகலரும் எழுந்துநின்று கைகளை உயர்த்தி உரிமைப் பிரகடனத்தை வாசித்து வெளியிட்டனர்.

அந்தப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

தென்னிலங்கையில் பயங்கரமான சிங்களப் பௌத்தப் பேரினவாதம் தலைவிரித்தாடுகின்றது. தமிழர்களுக்கு இது புதிதல்ல.நாடு சுதந்திரம் அடைந்ததாகச் சொல்லப்படும் காலத்திலிருநது இலங்கைத்தீவு முழுவதும் தமக்கே உரியது என்பதுதான் சிங்களப் பௌத்த பேரினவாதத்தின் நிலைப்பாடு.

ஆனால், இலங்கைத் தீவில் நீண்ட நெடுங் காலமாகத் தன்னாட்சி இறைமையுடன் தமிழ் மக்கள் வாழ்ந்துவந்துள்ளனர் என்பதைப் புறந்தள்ளி, தமிழ்மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக்கும் பல்வேறு நடவடிக்கைகள் சிங்கள பௌத்த பேரினவாதத்தால் மேற்கொள்ளப்பட்டன.

குடியுரிமை, நிலம், மொழி, கல்விரீதியாக மட்டுமன்றி இராணுவ ரீதியாகவும் தமிழ் மக்கள் நசுக்கப்பட்டு வருகின்றனர். வரலாற்று ரீதியாக இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கு தமிழ்பேசும மக்களின் தாயகமாகும்.

சிங்கள, பௌத்த பேரினவாத ஒடுக்குமுறையிலிருந்து விடுபட்டு, விடுதலை வாழ்வு வாழவேண்டும் என்பதே தமிழ்மக்களின் உறுதியான நிலைப்பாடு. கடந்த ஐம்பது வருடங்களுக்கும் மேலான எமது பட்டறிவின் வெளிப்பாடே இந்த விடுதலை வேட்கை.

இன்று இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் ஒரு சிறு கட்டமைப்பைக்கூட ஏற்கமறுக்கும் குரூரத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது சிங்கள பௌத்த பேரினவாதம்.

இத்தகைய சிங்கள பௌத்த பேரினவாதக் குரூரத்தைத் தமிழ்மக்கள் ஒன்றிணைந்து தோற்கடித்து, ஆக்கிரமிப்புப் படைகளிடமிருந்து எமது பாரம்பரிய வாழ்விடங்களை விடுவித்து, எங்கள் நிலத்தில் எங்கள் பலத்தில் எங்கள் சுயத்தை நாமே நிர்ணயிப்போம் என்று பிரகடனம் செய்கின்றோம் - என்றுள்ளது.

(ஐ-3-7-86-[illegible]1)

## பொதுக்கட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நடராஜா ரவிராஜ் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில கலந்துகொண்டனர்.

பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அரசு அதில் ஒப்பமிடவேண்டும் என்றும் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவரிடம் வலியுறுத்திக் கூறினர். பகல் 12.30 மணிக்கு ஆரம்பித்த இந்தச் சந்திப்பு சுமார் ஒரு மணிநேரம் நீடித்தது.

"பொதுக்கட்டமைப்பை நோர்வே அனுசரணையுடன் அரசுத் தரப்பினரும் விடுதலைப் புலிகளும் அங்கீகரித்துவிட்டனர். எனவே இனிமேலும தாமதிக்காமல் அது தொடர்பான ஒப்பந்தத்தில் அரசு கையெழுத்திடவேண்டும்.

"ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதின் பின்னர் மட்டுமே அதனை நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க அரசு முயலவேண்டும்.

"ஐ.தே.கவும் இதேபோன்றதொரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்." - என்று தமிழ்க் கூட்டமைப்பினர் ரணிலிடம் வலியுறுத்தினர் என்று சந்திப்பில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு விவகாரம் நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவரப்படுவதற்கு முன்னர் அது தொடர்பான ஒப்பந்தத்தில் அரசு கையெழுத்திடவேண்டும் என்பதில் தனது கட்சியும் உறுதியாக இருக்கிறது என்று ரணில் விக்கிரமசிங்க இந்தச் சந்திப்பில் உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

## மேல்மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

-இவ்வாறு தமது பதவியை இராஜினாமாச் செய்தார்.

மாலை 6மணியளவில் அவர் தனது இராஜினாமாக்கடிதத்தை ஆளுநரிடம் சமர்ப்பித்தார்.

அதனைத் தான் ஏற்றுக்கொண்டார் என்று ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்தார். ஐதே.க. - ஜே.வி.பி. இரண்டும் சேர்ந்து முன்னெடுக்க இருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை முறியடிக்க முடியாத பின்னணியில் வேறு வழியின்றி தமது பதவியை இராஜினாமாச்செய்யும் நிலைக்கு முதலமைச்சர் தள்ளப்பட்டுள்ளார் - எனக்கூறப்பட்டது.

## ஆளுங்கட்சி எம்.பிக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாடவுள்ளார்.

பொதுக்கட்டமைப்பு யோசனையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தால் அதற்கெதிரான செயற்றிட்டத்தை சபையில் முன்னெடுக்க ஜே.வி.பி. திட்டமிட்டிருப்பதாக செய்திகள் கசிந்துள்ள சூழ்நிலையில் அவ்வாறான திட்டத்தை முறியடிப்பது குறித்து இன்றைய கூட்டத்தில் விசேடமாக ஆராயப்படவுள்ளது எனத் தெரிகிறது.

இன்று ஜனாதிபதி மாளிகையில் பலமுக்கிய கூட்டங்கள், சந்திப்புகள் இடம்பெறவுள்ளன என்பதால் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இன்றையதினம் கொழும்பில் தங்கியிருக்க வேண்டுமென நேற்று ஜனாதிபத மாளிகையிலிருந்து அனைத்து உறுப்பினர்களுக்கும் விசேட பணிப்புரையொன்று விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## திட்டவட்டமான முடிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் வெளியாகிவருகின்றன.

இந்த விவகாரம் தொடர்பாக நோர்வே அனுசரணைத் தரப்பு மூல யோசனையை முன்வைத்த காலத்திலிருந்தே அதற்கு இணக்கம் தெரிவித்துவிட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு கடையைத் திறந்து வைத்துக்கொண்டு நாம் பார்த்திருக்கிறோம்; காத்திருக்கிறோம்.

ஆனால் அரசுத்தரப்பிலிருந்துதான் - ஜனாதிபதி பக்கத்திலிருந்துதான் - ஆக்கபூர்வமான - சாதகமான - பதிலேதும் கிடைப்பதாக இல்லை.

அப்படி, இப்படி சமிக்ஞைகள் வெளிப்படுத்தப்பட்டாலும் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான திகதி இதுதான் என்று திட்டவட்டமான அறிவிப்பு ஏதும் எமக்கு இப்போதுவரை (சனிக்கிழமை நண்பகல்வரை) தெரிவிக்கப்படவேயில்லை.

ஆனால் தெற்கிலிருந்து ஒன்றுக்கொன்று முரணான - குழப்பமான - தகவல்களும் செயதிகளும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இதுவிடயத்தில் எங்களுடன் ஒப்பந்தம் செய்வதில் ஜனாதிபதி திட்டவட்டமாகவும் உறுதியாகவும் இருக்கிறாரா என்பது கூடத்தெரியவில்லை. தென்னிலங்கை அரசியலுக்கு இந்த விவகாரத்தை ஏற்ற முறையில் பயன்படுத்துவதற்காகவும் சர்வதேச அவதானிப்பை திசை திருப்ப வைப்பதற்காகவும் கொழும்பில் அரசியல நாடகங்கள் சுறுசுறுப்பாக அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

- இந்தச் சாரப்பட தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார்.

இன்று கொழும்புவரும் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸனின் விஜயத்தோடு பொதுக்கட்டமைப்புத் தொடர்பான திட்டவட்டமான முடிவு தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

COMPUTER COURSES

A/L 2005 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே!

உங்கள் பெறுபேறுகள் வரும்வரையான பொன்னான காலப்பகுதியை IIS நிறுவனத்துடன் இணைந்து கொள்வதன் மூலம் பயனுள்ளதாக்கிக்கொள்ளுங்கள். IIS நிறுவனம் தனது 10வது ஆண்டு சிறப்புச் சலுகையாக இப்பிரிவுக்கு மட்டும் மிகக்குறைந்த கட்டணத்தில் கற்கை நெறிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது IIS உடன் இணைந்துகொள்ளும் இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

மேலதிகவிவரங்களுக்கு 23. 06. 2005 பத்திரிகையை எதிர்பாருங்கள்

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம். (C/43455) (25-11-13)

324, Palaly Road, Jaffna.
BIT
விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்
Bachelor of Information Technology
External Degree Programme
University of Colombo School of Computing
Selection Exam
Free Guidance Classes
New Batch will be Commenced on
25th June at 02.00 p.m.
Specially for A/L Students
Supported by UNDP/JRRP

## மரண அறிவித்தல்கள்

### திருமதி விசுவலிங்கம் அமிர்தம்

கொக்குவில் மேற்கு, நாகலிங்கம் வீதியைச் சேர்ந்த திருமதி விசுவலிங்கம் அமிர்தம் தனது 80 ஆவது வயதில் 17.06.2005 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

திருமதி அமிர்தம் அவர்கள் காலஞ்சென்ற கொக்குவில் மேற்கு தாமோதரம்பிள்ளை - பொன்னு தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற முருகேசு விசுவலிங்கம் (முன்னாள் Operator - மனோகரா படமாளிகை) அவர்களின் பாசமிகு மனைவியும், ரவீந்திரன் (பெண் - சிவகௌரி, சுவிஸ்), திருமதி இராசகுணம் (செல்லையா, தவானந்தன் பெண், பிரான்ஸ்), விமலராஜா (ஆரணி Auto Spares, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), செல்விகள் பவானி (பிரான்ஸ்), அருணா மற்றும் விஜயபாலா (தி/தொழில்நுட்பக் கல்லூரி, திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், நிஷாந்தினி, பிரபாலினி, தமிழினி (பிரான்ஸ்) கௌஷிந், ரக்ஷிந் (சுவிஸ்) ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.06.2005 புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அழகக்கோன் சிவானந்தன்,
அழகக்கோன் அருளாநந்தன்
சகோதரர்கள்
(நல்லூர் ப.நோ.கூ.சங்கம்)

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (36755) (25-11-13)
தொ.பே.:0712506883

### திருமதி ஆனந்தவேல் றிவிந்தா



அல்வாய் வடக்கு, வீரபத்திரர் கோயிலடியைச் சேர்ந்த ஆனந்தவேல் (ராசன்) அவர்களின் அன்பு மனைவி றிவிந்தா அவர்கள் நேற்று (19.06.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2005) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.இலட்சுமிகாந்தன் (தந்தை)

வீரபத்திரர் கோயிலடி,
அல்வாய் வடக்கு. (36756) (25-11-13)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.